# புரட்சி சதிவழக்கில் சகல எதிரிகளும் விடுதலை


'egistered as a News paper in 'eylon விலை சதம் 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 324
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 19 ஷவ்வால் 24 சனிக்கிழமை [3-1-70]



போன்: 7199
தந்தி: வைரம்
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.


கோட்டை, வெள்ளி
அரசாங்கத்துக்கெதிரான புரட்சிச் சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 12 குற்றவாளிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டனர். உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இன்று வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்ட போது ஜூரிமார்களின் ஏகமனதான முடிவைத்தொடர்ந்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜூரிகள் தமது ஏகமனதான முடிவை இன்று பிற் 2-30க்கு தெரிவித்தார்கள் இப்புரட்சி சதிவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மற்றவர்கள் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே.

நீதியரசர்கள் திரு. ஜி, பி. எஸ். சில்வா, திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. விக்டர் தென்னக்கூன் ஆகிய மூவர் இந்தவழக்கை விசாரணை செய்தனர்.

## தேக்குமரச் சச்சரவு

சுழிபுரம், வெள்ளி
மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்றவர்கள் பெரியதொரு தேக்குமரத்துடன் கரை திரும்பினர். தேக்கமரத்தை சொந்தமாக்கிக் கொள்வதில் மீனவரிடையே ஏற்பட்ட சச்சரவு சுழிபுரம் கிராமசேவையாளர் வரை வந்து நின்றது.

## சுதந்திரதின கொண்டாட்டம் மாத்தறையில் நடைபெருது

கோட்டை, வெள்ளி
உத்தேசிக்கப்பட்டபடி சுதந்திரன கொண்டாட்டங்கள் இந்த வருடம் மாத்தறையில் நடைபெற மாட்டாது எனவும் கொழும்பிலேயே கொண்டாடப்படுமெனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாத்தறையில் ஏற்பட்டுள்ள வெள்ளச்சேதங்களினாலேயே இவ்விதமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் நிவாரணவேலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும்தெரிவிக் கப்பட்டது


மாத்தறையில் இப்போது நிவாரணவேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டுருக்கிறது,

## 3 மாதத்தில் விண்ணப்பித்தவர் தொகை: 72

# யாழ். மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைக்கு போதிய ஆதரவில்லை

## பாரத ஜனதிபதி கிரி யாழ்ப்பாணம் வருகிறார்

### 11-ம் திகதி மாநகரசபை வரவேற்பு



யாழ்ப்பாணம், சனி
பாரத ஜனதிபதி திரு வி வி கிரி இம்மாதம் 11-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். திரு கிரியை வரவேற்பதற்கான நடவடிக்கைகளில் யாழ்ப்பாணம் மாநகரசபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது

11-ம் திகதி காலை 9-30 மணியளவில் விமானமூலம் பலாலிவந்தடையும் திரு கிரிக்கு 9-45 மணிவரை பலாலி விமானநிலையத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும். தொடர்ந்து பலாலியிலிருந்து கார் பவனி மூலம் ஜனதிபதி யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அழைத்துச்செல்லப்படுவார் மாநகரசபையில் காலை 10-10 மணி தொடக்கம் 11-15 மணி வரை பொது வரவேற்பு வைபவம் இடம் பெறும்

மதிய போசன விருந்து 'கிங்ஸ்' மாளிகையில் நடைபெற்றபின் திரு கிரி மாலை 3 மணிக்கு விமானமூலம் பாரதம் திரும்புவார்.

## கோஷ்டிச் சண்டையில் நால்வர் படுகாயம்

### 7 பேர் தலைமறைவு

யாழ்ப்பாணம். சனி
கரையூர் பொலிஸ் பகுதியில் இரண்டு கோஷ்டியினருக்கிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவமொன்றில் நால்வர் காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில் கடந்த இரவு நடைபெற்றது.

டேவிட் எட்வின் (18) செல்லத்தம்பி (18) ஏபிரகாம் (27) ஆகிய மூன்று வாலிபர்களும் மற்றொருவருமே இக் கோஷ்டிச்சண்டையில் காயமடைந்தவர்களாவர். பொல்லு, உலக்கை ஆகிய ஆயுதங்கள் இச்சண்டையில்ப விக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஏழுபேர் கொண்ட கோஷ்டியொன்றை இது சம்பந்தமாக சந்தேகத்தில் கரையூர் பொலிஸார் தேடி வருகின்றனர். (கா. நி)

## தொகுதி தோறும் பிரசாரம் செய்ய முடிவு

(காரியாலய நிருபர் 'திரு')
யாழ். மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவையை ஆரம்பிக்க கடந்த இரண்டு மாதங்களாக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் சேவை இன்னமும் அமைக்கப்படவில்லை. போதிய வாலிபர்கள் இச்சேவையில் சேர முன்வராததே இதற்குக் காரணமா [illegible] யாதிகாரி பிரிவுகளில் ஆரம்பிக்கப்படும்.

### தினம் 3 ரூபாய் வேதனம்

சேவையில் சேர்ந்த வாலிபர்[illegible]ளுக்கு கடமையாற்றும் நா[illegible] ஒன்றிற்கு 3 ரூபாவீதம் வே[illegible]னம் வழங்கப்படும். வாரந்தில் 5 நாட்களுக்கு [illegible] சம்ப[illegible] சரிச் சம்பளத்தில் 1 ரூபா [illegible] யாக ஈடுபட்டவர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பயிற்சிக கல்லூரிகள் இரண்டு யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படும்.

ஒன்று அச்சுவேலியிலும், மற்றது கிளிநொச்சி[illegible]யும் நிறுவப்படும். அச்சுவேலியில் இதற்கான காணியும் [illegible]ப்பட்டுள்ளது.

இங்கு 6 மாதத்திற்குப் பயிற்சி வழங்கப்படும் பயி[illegible]

## திராட்சை செய்கை பாதிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி
அண்மையில் தொடர்ந்து பெய்த பெருமழையினால் இப் பகுதியில் திராட்சைச் செய்கை அதிகம் பாதித்துள்ளது. சில இடங்களில் திராட்சைக் கொடிகள் முற்றாக வாடிய நிலையில் உள்ளன.

உருளைக்கிழங்கு வெண்காயம் முதலியனவும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. ஏழை விவசாயிகளுக்கு ஏற்பட்ட இந்த பெருநஷ்டம் பற்றி இப்பகுதி விவசாயிகள் கவலைதெரிவித்துள்ளனர்.

சேந்தான்குளம் புதியகுடி [illegible]

# வெள்ளம் வடிகிறது நிலைமை சீராகிறது

கோட்டை, வெள்ளி
நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதே சமயம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் [illegible] மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களைக்கொண்ட மாநாடு ஒன்றைத் தாம் கூட்டுவதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் சூழ்ந்து அவதிப்பட்ட மக்களை மீட்கமுடியாமலிருந்த பகுதிகளில் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப் பகுதியில் கடந்த இரவு நடைபெற்றது.

டேவிட் எட்வின் (18) செல்லத்தம்பி (18) ஏப்ரகாம் (27) ஆகிய மூன்று டியொன்றை இது சம்பந்தமாக சந்தேகத்தில் கரையூர் பொலிஸார் தேடி வருகின்றனர். (கா.நி)

## "உள்ளூராட்சி மன்ற தலைவர்களை வாக்காளர் தெரியவேண்டும்"

### — முன்னாள் எம். பி.

யாழ்ப்பாணம், சனி

உள்ளூராட்சிமன்றத் தலைவர்களை, சபை அங்கத்தவர்கள் தெரிவதை நிறுத்தி, வாக்காளர்களே தெரிந்தெடுக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு அமுலாக்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் ஜெயசூரியா கமிஷன் முன் சாட்சியமளித்த யாழ்ப்பாண முன்னாள் எம்.பி.யும், தற்போதைய மாநகரசபை உறுப்பினருமான திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

இவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

'கிராமசபை, பட்டினசபை நகரசபை மாநகரசபை ஆகியவற்றின் அங்கத்தவர்களே சபை முதல்வரைத் தெரிவுசெய்வதால் அங்கு அரசியல்தாண்டவமாடுகின்றது. இதனால் சில அங்கத்தவர்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

எனவே உள்ளூராட்சி அமைச்சரின் திட்டப்படி வாக்காளர்களே உள்ளூராட்சித் தலைவரைத் தெரிவுசெய்யும் சட்டத்தை அமுலாக்க வேண்டும். (கா.நி)

## கிணற்றுள் விழுந்த இளம் பெண் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், சனி

விவசாய இலாகாவில் கடமையாற்றும் இருபத்தெட்டு வயது இளம்பெண்ணொருவர் தண்ணீர் அள்ளும் போது கிணற்றில் தவறிவிழுந்ததால் நீரில்மூழ்கி மரணமானார்

இப்பரிதாப சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை அரியாலை மேற்குப்பகுதியில் நடைபெற்றது.

கொழும்பு விவசாய இலாகாவில் விவசாய போதனாசிரியராகக் கடமையாற்றுபவர் அரியாலையைச்சேர்ந்த ஜெயராணி மாணிக்கவாசகர் என்பவரே கிணற்றுள் விழுந்து மரணமானவராவார்.

மரணவிசாரணை நடத்திய திரு. என். இராசநாயகம் நீரில்மூழ்கியதால் ஏற்பட்ட விபத்துமரணமென்று தீர்ப்பளித்தார். (கா.நி)

## கார் - லொறி கோரவிபத்து

### தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

மட்டுவில், வெள்ளி

காரும், லொறியும் கோர விபத்துக்குள் சிக்கின. காரின் முன்பாகம் சிதறியது; லொறியின் இடது பக்கம் நசுங்கியது. ஆனால் தெய்வாதீனமாகக் கார்ச்சாரதியும், லொறிக் கிளீனரும் மயிரிழையில் உயிர் தப்பினர் இதனால் சுமார் மூன்று மணி நேரம் தடைப்பட்டுநின்ற வாகனப்போக்குவரத்தையும், கூடி நின்ற பெரும் சனக்கூட்டத்தையும் சாவகச்சேரிப் பொலிஸார் சமாளித்தனர்.

நேற்று நண்பகல் கைதடிப் பாலத்திற்கருகில் இப்பெரும் விபத்து நடைபெற்றது.

கார்மீது லொறி மோதியதும், லொறி சுமார் 10 அடி தூரத்திற்குக் காரைப் பின்புறமாகத் தூக்கி வீசியது. இதனால் இரு முனைகளிலும் சுமார் 3 மணி நேரம் இ. போ. ச. பஸ் உட்படச் சகல வாகனங்களும் போக்குவரத்துக்குத் தடைப்பட்டு நின்றன. அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு பஸ்ஸில்வந்துகொண்டிருந்த ஈழநாடு நிருபர் கார்ச்சாரதியைக் காரிலிருந்து வெளியில் வர உதவினர்.

## மு. வ. நூலகம்

சுழிபுரம், வெள்ளி

டாக்டர் மு. வரதராஜனின் நூல்களை மட்டும் கொண்ட தனிநூல் நிலையம் ஒன்றை வழக்கம்பரையில் இம்மாத நடுப்பகுதியில் திறந்து நடாத்துவதற்கான முயற்சியில் வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் ஈடுபட்டுள்ளனர். நூல்களைப் பெற்றுப் படிக்க விரும்புபவர்கள் நிலையச் செயலாளருடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

---

போதிலும் சேவை இன்னமும் அமைக்கப்படவில்லை. போதிய வாலிபர்கள் இச்சேவையில் சேர முன்வராததே இதற்குக் காரணமாகும். தென்னிலங்கையில் நான்கு மாதங்களுக்குள் சுமார் 15,000 வாலிபர்கள் இச்சேவையில் சேர்ந்துள்ளார்கள். ஆனால் யாழ். மாவட்டத்தில் 3 மாதமாகியும் சுமார் 72 வாலிபர்களே இச்சேவையில் சேர விண்ணப்பித்துள்ளனர்.

இதனால்யாழ்ப்பாணத்தில் தேசிய வாலிபர் சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக இங்கு வரவிருந்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் விஜயம் மூன்று தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

### ஒவ்வொரு பிரிவிலும் பிரச்சாரம்

யாழ்ப்பாணம் குருநகர் கடல் அணைப்பு வேலைகளை முதலாவதாக தேசிய வாலிபர் சேவை மூலம் செய்வதெனவும் அரசாங்க அதிகாரிகள் முடிவுசெய்துள்ளனர். இருப்பினும் இச்சேவையின் நோக்கம், முக்கியத்துவம், ஆகியனபற்றி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுதோறும் பிரசாரம் செய்வதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸும், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளையும் இப்பிரசாரத்திற்கான முழு ஒழுங்குகளையும் பொறுப்பேற்றுள்ளனர். நான்கு பிரசாரககூட்டங்கள் இம்மாதத்தில் தென்மராட்சிக் காரியாதிகாரி பிரிவில் நடைபெறவுள்ளன.

### இவர்கள் சேரலாம்

தேசிய வாலிபர் சேவை பற்றி, இச்சேவைக்கு யாழ்ப்பாணத்தில் பொறுப்பாகவிருக்கும் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பின்வரும் தகவல்களைத் தெரிவித்தார்:

16 வயதுக்கு மேற்பட்ட வேலையற்ற வாலிபர்எவரும் இச்சேவையில் சேரலாம். ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவு தோறும் இச்சேவை ஆரம்பிக்கப்படும். இதற்கான விண்ணப்பப்பத்திரங்களை அந்தப் பகுதிக்கிராமசேவையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இதில் சேர்பவர்களை அரசாங்கம் தனது செலவில் படம் எடுத்து அடையாள அட்டைவழங்கும். ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் குறைந்தது100வாலிபர்களாவது சேர்க்கப்பட்ட பின்னரே இச்சேவை காரி

நாள்...ஒன்றிற்கு 3 ரூபா வீதம் வேதனம் வழங்கப்படும். வாரத்தில் 5 நாட்களுக்கு வேலையுண்டு. வாரா வாரம் சம்பளம்வழங்கப்படும். தினசரிச் சம்பளத்தில் 1 ரூபா அவர்களது தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் சேர்க்கப்படும். மிகுதி 2 ரூபாவே சம்பளமாக வழங்கப்படும்.

தொடர்ச்சியாக 5 நாட்களுக்குவேலைசெய்தால் ஒரு 'கௌரவப்'புள்ளி அடையாள அட்டையில் பொறிக்கப்படும். எந்தவேலைக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சென்றாலும் தேசிய வாலிபர் சேவையிலுள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதிகம் அடையாள அட்டையில் கூடிய கௌரவப் புள்ளிகள் உடையவர்களுக்கு விசேஷ முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

### விசேஷபயிற்சி

சேவையில் தொடர்ச்சி மற்றது இனிநொச்சியும் நிறுவப்படும். அச்சுவேலியில் இதற்கான காரியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இங்கு 6 மாதத்திற்குப் பயிற்சி வழங்கப்படும் பயிற்சி பெறும் காலத்தில்...ன உணவு, உடை, படுக்கை வசதிகளுக்கான சகல செலவுகளையும்அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

இப்பயிற்சியிலிருந்து வெளியேறும் ஊழியர்களுக்கு நாடு பூராவுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகங்களிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் தொழிற் பயிற்சிக் கல்வி பெற அனுமதி வழங்கப்படும்.

அதுமட்டுமன்றி ஜப்பான் மேற்கு ஜேர்மனி ஆகிய இடங்களில் உபகாரச் சம்பளம் பெற்று தொழிற் பயிற்சி பெறவும் அரசாங்கம் வசதி செய்துகொடுக்கும்

---

ஏழை விவசாயிகளுக்கு ஏற்பட்ட இந்த பெருநஷ்டம் பற்றி இப்பகுதி விவசாயிகள் கவலைதெரிவித்துள்ளனர்.

சேந்தான்குளம் புதியகுடியேற்றப் பகுதியில்வீதிவெட்டப்பட்டு வெள்ளம் கடலுக்குள் ஓட விடப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பிலும் சில வீதிகள் வெட்டப்பட்டுள்ளன.

லும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதே சமயம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் வேலைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன.

மட்டக்களப்பில் நிலைமை சீராகி வருவதாகவும் நிவாரண உதவியளிப்பது சம்பந்தமாக மட்டக்களப்பு மாநாடு ஒன்றைத் தாம் கூட்டுவதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் சூழ்ந்து அவதிப்பட்ட மக்களை மீட்கமுடியாமலிருந்த பகுதிகளில் இப்பொழுது போக்குவரத்துச் செய்யக்கூடியநிலை ஏற்பட்டிருப்பதாகவும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று இழுக்கப்பட்ட 269-வது தேசியசுவீப்முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

02 M 0114 ரூபா 73,770

இரண்டாம் பரிசு

13 O 0406 ரூபா 29,508

மூன்றும் பரிசு

27 G 0892 ரூபா 7,377

தலா ரூபா 368-85 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 29 A 0121 | 11 A 0625 |
| 29 A 0542 | 25 A 0150 |
| 31 A 0450 | 29 A 0648 |
| 02 A 0099 | 04 B 0302 |
| 24 B 0101 | 02 B 0803 |
| 19 B 0833 | 30 B 0386 |
| 02 B 0508 | 08 B 0059 |
| 06 B 0846 | 25 C 0995 |
| 26 C 0338 | 26 c 0326 |
| 12 C 0499 | 09 C 0176 |
| 29 C 0077 | 26 D 0760 |
| 16 D 0707 | 11 D 0732 |
| 03 E 0932 | 13 F 0256 |
| 01 F 0193 | 07 F 0512 |
| 15 F 0015 | 29 F 0145 |
| 16 F 0987 | 21 G 0521 |
| 01 G 0940 | 04 G 0183 |
| 03 G 0528 | 06 G 0412 |
| 13 G 0261 | 09 H 0998 |
| 12 H 0469 | 25 H 0391 |

| | |
|---|---|
| 14 J 0990 | 12 J 0977 |
| 07 K 0663 | 15 K 0979 |
| 20 K 0164 | 24 L 0204 |
| 25 L 0014 | 24 L 0309 |
| 17 L 0493 | 01 M 0682 |
| 30 N 0579 | 29 N 0548 |
| 09 O 0012 | 19 O 0259 |
| 02 O 0966 | 29 O 0698 |
| 10 P 0244 | 10 P 0708 |
| 18 P 0794 | 20 Q 0079 |
| 21 Q 0200 | 01 Q 0614 |
| 30 Q 0531 | 16 Q 0603 |
| 11 R 0297 | 02 R 0514 |
| 27 R 0635 | 31 R 0335 |
| 27 R 0262 | 04 S 0067 |
| 23 S 0180 | 19 S 0617 |
| 23 S 0417 | 14 S 0903 |
| 19 T 0283 | 18 T 0239 |
| 20 T 9445 | 23 U 0939 |
| 05 U 0491 | 07 U 0554 |
| 12 U 0533 | 21 U 0915 |
| 10 V 0106 | 30 V 0729 |
| 28 W 0233 | 10 W 0856 |
| 05 W 0441 | 24 W 0038 |
| 30 W 0343 | 08 W 0952 |
| 11 X 0959 | 14 X 0359 |
| 10 Y 0292 | 21 Y 0339 |
| 19 Y 0156 | 18 Y 0331 |
| 24 Y 0197 | 15 Y 0377 |
| 32 Z 0372 | 04 Z 0236 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## 'வியட்நாமில் அமைதிக்கு வாய்ப்புண்டு'

சைகோன், ஜன. 2

புத்தாண்டில் வியட்நாமில் அமைதியேற்படுவதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது என்று அமெரிக்க உபஜனாதிபதி திரு. அக்னூ கூறியிருக்கிறார்.

தென்வியட்நாமில் அதிபர் வான்தியூவுடனும், அமெரிக்க ராணுவ அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு தாய்வானுக்குப் புறப்படுமுன்னர் திரு. அக்னூ நிருபர்களிடம் பேசினார். அதிபர் வான்தியூவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஊக்கமளிப்பதாக இருக்கிறது என்றும், 1970-ம் ஆண்டில் வியட்நாமில் அமைதி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றது என்றும் அவர் நிருபர்களிடம் கூறினர்.

சுழிபுரம், வெள்ளி

அராலிக் கிராமசபையின் 8ம் வட்டார இடைத் தேர்தலில் என். நடராசா வெற்றிபெற்றார்.

### பிரதிஷ்டை

சுழிபுரம், வெள்ளி

பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் பிள்ளையார், நவக்கிரகம் ஆகிய விக்கிரகங்கள் பிரதிஷ்டைசெய்யப்படவிருக்கின்றன.

## "கைகளிலும், வயிற்றிலும் வெட்டியதும்மூர்ச்சையானேன்"

மட்டுவில், வெள்ளி

"என்னடா என்னை தம்பிக்கு 'அடித்தியாமடா' என்று சொன்னபடி குளை வெட்டும் சத்தகத்தை ஓங்கிக்கொண்டு வந்த எதிரி என் வலது கையிலும் இடது கையிலும் வெட்டியதுடன் வயிற்றிலும்கொத்தி பெரிய காயத்தை உண்டாக்கினர். நான் ஓடமுடியாது விழவே கையாலும் காலாலும் தாக்கினர்,',

இவ்வாறு பெரிய வேம்பிராயில் நடைபெற்ற கத்திவெட்டுச் சம்பவ வழக்கில் காயமடைந்த சின்னர் கந்தையா என்ற வாலிபர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

இந்த வழக்கில் வேம்பிராயைச் சேர்ந்த அப்புக்குட்டி சின்னத்துரை, அப்புக்குட்டி செல்லத்துரை, பண்டாரி சுப்பிரமணியம் ஆகிய மூவரும் வடிவேலு கடையடியில் வைத்து அதே ஊரைச் சேர்ந்த சின்னர் கந்தையா என்ற வாலிபரை சத்தகத்தால் வெட்டி, காலாலும் கையாலும் தாக்கியதாக சாவகச்சேரிப் பொலிசார் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

விசாரணையின்போது சாட்சியமளித்த சின்னர் கந்தையா என்ற வாலிபர் தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது:

சம்பவதினம் நான் வடிவேலு கடைக்குப் போனேன் அப்பொழுது அங்கே எதிரிகள் மூவரும் நின்றனர். அப்போதுதான் சம்பவம் நடந்தது. கத்திவெட்டுச் சபம்வத்திற்குப் பின் எதிரிகள் எனது தொடையில் கொட்டனால் அடித்தனர், நான் ரோட்டில் விழுந்தேன் பின் கையாலும் காலாலும் தாக்கினர். நான் ஒருவாறு எழுந்து மூத்தான் தோட்டத்திற்கு ஓடிப்போனேன். அங்கு மூர்ச்சையாகிவிட்டேன். நான் மூர்ச்சை தெளிந்தபோது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இருந்தேன். அங்கு சில காலம் சிகிச்சை பெற்றபின் வீடுதிரும்பினேன்

இந்த வழக்கில் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வகேட் திரு கே வி எஸ் சண்முகநாதன் ஆஜரானர். வழக்கறிஞர் திரு வி. பாலகிருஷ்ணன் அனுசரணையுடன் சாவகச்சேரி பொலீஸார் வழக்கை நடத்தினர். மேல் விசாரணை ஜனவரி 9-ம் திகதிக்குஒத்திவைக்கப்பட்டது.

## ஒன்றே ஒன்று; அங்கும் இல்லை

அனலைதீவு'வெள்ளி

இங்குள்ள ஒரே ஒரு உப-தபால் கந்தோரில் முத்திரையுடன் என்வலப்பு பெற முடியாமல் இருக்கிறது.

கடந்த2 வாரங்களாக இவற்றுக்கு இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது பற்றி ஊர்காவற்றுறை தபால் கந்தோருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எது விதநடவடிக்கையும் எடுக்கப்பட வில்லையாம். இப்பகுதி மக்கள் இதனால் பெரிதும் கஷ்டமுறவேண்டி ஏற்பட்டுள்ளது.

### வெள்ள சேதத்தை நேரில் பார்வையிட

# பிரதமர் நாளை மட்டக்களப்புக்கு விமானம் மூலம் செல்கிறார்

கோட்டை, சனி

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி நேரில் பார்வையிடுவதற்காக பிரதமர் திரு டட்லி சேனநாயகா நாளை காலை விமானமூலம் அங்கு செல்கிறார்,

விமான மூலம் செல்லும் பிரதமர் பின் ஹெலிகாப்டரில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்வார். முதலில் அம்பாறைக்கும் பின் மட்டக்களப்புக்கும் செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

### கஜபாகு சென்றது

இதற்கிடையே தென் மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்கென கடற்படையினரின் 'கஜபாகு' என்ற கப்பல் 12,000 மாமூடைகளை ஏற்றிக்கொண்டு சென்றுள்ளது மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை வழங்குவதில விசேஷ கவனம் செலுத்துமாறு இப்பகுதிகளிலுள்ள கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### விமானமூலம் உணவு

அம்பாறைப் பகுதியில் தொடர்பிழந்து தவிக்கும் 400 குடும்பங்களுக்கு விமானம்மூலம் உணவுப்பொட்டலங்கள் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டுவருகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3 KV, 1 1/2 KV — 230 AC மின்சார இயந்திரங்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். நா. சிவபாலமூர்த்தி, 8, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 1749

### கல்வி

பொதுச் சௌக்கியம் பயில்வோர் பயிற்சி வகுப்பு, ஆண் தாதிகள் பரீட்சை ஆகியவற்றிற்கான தமிழ்ப் பாஷை, பொது அறிவு, பொது விவேகம் ஆகியவற்றிற்கான வகுப்புகள் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. உடன் சேரவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1747

கல்வி

உலகில் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் கூடிய ஆசிரிய அனுபவம் உள்ளவராலும், இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் முன்னோடியாலும், 48 வருட வர்த்தக அனுபவமுள்ள ஆசிரியராலும் சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக எண்கணிதம், தமிழ்/ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றது. உடன் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக்கல்லூரி பருத்தித்துறை 1746

## அமைதி நிலவுகிறது

மஸ்கெலியா, வெள்ளி

பொகவந்தலாவை டிக்கோயா, மஸ்கெலியா வட்டகொடை ஆகிய பகுதிகளிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிககளைப் பொலிசார் ரோந்து புரிந்து வருகின்றனர். வேலைநிறுத்தம் நடைபெறும் இப்பகுதிகளிலெல்லாம் நிலைமைகள் அமைதியாகவிருப்பதாகவும் குழப்பங்கள் எதுவும் நடைபெறவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை (வரையறுக்கப்பட்டது)

1970-ம் ஆண்டு தை மீ 6-ந் திகதி கூட இருந்த எங்கள் ஸ்தாபனத்தின் விசேட கூட்டத்தைப் பற்றி பங்குதாரர்கட்கு நிர்வாகத்தர் அறியத்தருவது:

ஷெ கூட்டத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இரு பிரேரணைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் (வழ. இல. 833) தொடர்ந்தும் விசாரணைக்கெடுக்கப்பட இருப்பதாலும் ஷெ நீதிமன்றம் 24-12-69ல் தம் பாலைக் காணியில் போடப்பட்ட கட்டடத்தைத் தொடர்ந்து பூர்த்தி செய்யும்படி உத்தரவளித்திருப்பதனாலும், ஆகவே இவ்விடயங்கள் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படுவதற்கு இருப்பதனாலும் (Subjudice) ஷெ கூட்டத்தைக் கூட்டும்படி கேட்ட கையொப்பகாரருள் சிலர் தங்கள் கோரிக்கையை வாபஸ் பெற்றதாலும் நிர்வாகக்குழு ஷெ கூட்டத்தை 6-1-70ல் கூட்டுதல் முறையல்லவெனத் தீர்மானித்துள்ளது. எனவே ஷெ கூட்டம் இவ்வறிவித்தலினால் ரத்துச் செய்யப்படுகின்றது.

நிர்வாகக் குழுவின் ஆணைப்படி,
ச. ஞானமூர்த்தி,
காரியதரிசி.

வல்லை,
உடுப்பிட்டி,
2-1-70. 1900

## 'நல்ல பஸ் சேவை'

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை-யாழ்ப்பாண இ.போ.ச பஸ் சேவை புத்தாண்டில்மிகவும் திருப்திகரமாக நடந்ததாகஇப்பகுதி பிரயாணிகள் திருப்தி தெரிவிக்கின்றனர் தொடர்ந்து இதே போன்று நல்லசேவை தமக்குக் கிடைக்குமென அவர்கள் நம்புகின்றனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 3 — 1 — 70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம். 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## கிராம அபிவிருத்திக்கு யோசனை

யாழ்ப்பாணம், சனி


எழுதுமட்டுவாள் மறவன்புலோ மேற்கில் திரு எம் கனகசபை தலைமையில் பயிர்ச் செய்கைக்குழுக்கூட்டம் நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எம். மகாலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''இப்பகுதியில் விவசாய நிலங்கள் பரந்து இருந்தும் மக்கள் ஏழைகளாக வாழ வேண்டிய பரிதாப நிலை இருக்கக் காரணங்கள் பல உண்டு அதில் முக்கியமாக தேவைக்கு தகுந்த நீரை சேமிக்கவும் மிகுதியை அகற்றவும் போதிய வாய்க்கால் தொடர்புகள், துருசுகள், பாலங்கள், சிறந்த குளங்கள் இல்லாமையே இப்பகுதி விவசாயிகள் தமது ஒத்துழைப்பைத் தந்தும் விவசாய வரிப்பணங்களை கட்டியும் வந்தால்தான் இப்பகுதியில் காட்டுகின்ற அக்கறைக்கு பலன் உண்டு''.

கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. எம். கனகசபை பேசுகையில் ''இப்பகுதியில்

## மிருதங்க அரங்கேற்றம்



யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கச் சனசமூக நிலையக் கென்னடி அரங்கில் நாளை மாலை செல்வன் பா. பிலேந்திரனின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவிருக்கிறது.

இராமநாதன் மியூசிக் அக்கடமித் தலைவர் சித்தூர் ஸ்ரீ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். நகர மேயர் திரு. சி. நாகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

இவ்வைபவத்தில் வண பிதா சவிரிமுத்து, மிருதங்க இசைப் பேராசிரியர் திரு. ஏ. எஸ். இராமநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டும் இடம்பெறும். மாநகர சபை உறுப்பினர் திரு. ஏ. பேர்ல்ராஜா வரவேற்புரை நிகழ்த்துவார்.

செல்வன் பாவிலுப்பிள்ளை பிலேந்திரன் மிருதங்க வித்துவான் ரி. பாக்கியநாதனின் மாணவராவர்.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 19-ம் திகதி [3-1-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்** உவகைதரும் சம்பவங்கள் இடம் பெறும் உறவினர் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். குடும்பத்தர்களின் வாழ்க்கையில் இனிமை தவழும் சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும்.

**ரிஷபம்-** கோஷ்டிச் சண்டையில் உங்களையும் மாட்டிவிடுவதற்குச் சிலர் முனையக்கூடும். கொறிக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம். மேலதிகாரியின் கோபத்துக்கு இலக்காகுவீர்கள். துக்க தினம்.

**மிதுனம்-** தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும். மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும், சிலருக்கு தெய்வவழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். ஸ்தல யாத்திரைக்கும் இடமுண்டு.

**கடகம்-** வாழ்க்கையில் வசதிகள் பெருகும். கற்றதனால் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும். செய்தொழிலில் புதிய உத்திகளைக் கையாளுவீர்கள், சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

**சிம்மம்-** செலவுக்குவேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம்காட்டுவீர்கள். புதுமனை கட்டுவதற்கும் எண்ணம் பிறக்கும். சிறப்பான தினம்.

**கன்னி-** கடன் தொல்லைகள் அதிகரிக்கும். கூட்டு வியாபாரம் ஏமாற்றத்தை தரலாம். தனிவழிப் பயணத்தை தவிர்த்துக் கொள்ளவும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனம் செலுத்தவும்.

**துலாம்-** முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர், கணவன் மனைவி உறவு முறை பூசல்கள் நிறைந்ததாக இருக்கும். பொறுமை விரும்பத்தக்கது.

**விருச்சிகம்-** வாழ்க்கை தேனாக இனிக்கும் சிலர்வாழ்க்கையில் அரசினர் விருதும் கிடைக்கக்கூடும். புதியதுறையின்மூலம் பொருளைத் தேடுவீர்கள். உடல்நலத்திலும் நல்ல முன்னேற்றமுண்டு.

**தனுசு-** ஏக்கத்தின் சாயல் நிழல்போலத் தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வேதனையைத் தரும். முற்கோபத்தினால் கலகங்கள் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

**மகரம்-** வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வாக்காளர்களுக்கு உண்மையை உணரவைக்க மாபெரும் இயக்கம் தேவை"

— பண்டிதர்

அல்லைப்பிட்டி, வெள்ளி

''இன்று தமிழர்களிடையே உள்ள அரசியல் கட்சிகள் மட்டுமின்றி ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சி முதலியனவும் தமிழ் மக்களுக்கு நன்மை செய்கின்றோம். அவர்களை நாங்கள் கைவிடமாட்டோம் என்று கூறிவருகின்றன. இவ்வாறு தங்கள் நோக்கத்தை எடுத்துரைக்கும் இக்கட்சிகளின் செயலையும் சிந்தனையையும் சீர்தூக்கிப் பார்த்து தமிழ்மக்களுக்கு நன்மை செய்யத்தக்க தொரு கட்சியை ஆதரிப்பது தமிழ் மக்களுடைய முக்கியகடமையாகும்''

மேற்கண்டவாறு ஊரதிவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி அமைப்புக்கூட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சித் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. இரத்தினம் இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில், ''நோக்கம் ஒன்றேயெனக்கூறி வரும் இக்கட்சிகள் ஒன்றையொன்று தாக்குவதன் மூலமும் தூற்றிப் பொய்ப்பிரசாரம் செய்வதன் மூலமும் தமிழ் மக்களை ஏமாற்றப்பார்க்கின்றது.

இந்தியாவில்ஜயப்பிரகாஷ் நாராயணன் கூறியதுபோல வாக்காளர்களுக்கு உண்மையைஉணரச்செய்வதற்கு இலங்கையிலும் ஓர் மாபெரும் இயக்கம்தேவைப்படுகின்றது'' என்றார்.

## மாவை திருப்பணி சபை அறிக்கை

மாவிட்டபுரம், வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைச் சிறப்புற அமைக்க மாவை ஆலயத் திருப்பணிச்சபை மிகத் துரிதமாக வேலைகளைச் செய்து வருகிறது.

மாவை ஆலயத் திருப்பணி வேலைகள் சம்பந்தமாக திரு. செ. சுந்தரலிங்கம் தலைமையிலான திருப்பணிச்சபை விடுத்துள்ள அறிக்கையொன்றில், ஆலயத்தைத் சிறப்புற அமைக்கத் தென்னாட்டிலிருந்து 12கைதேர்ந்த சிற்பிகளை வரவழைக்க அரசு உத்தரவு கொடுத்து வேலை ஆரம்பித்திருக்கிறார்கள் விநாயகர் கோவில், மூலஸ்தான விமானம், தெற்குப் பிரகாரம் முதலிய வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

மூலஸ்தான விமானம் மிகத் திறமையாகவும் அழகாகவும் பொதுநிதியில் கட்டப்படுகிறது.

பிரதான வீதியோரத்தில் உள்ள வியாபாரக் கடைகள் கோயிலுக்கு வெளியே 100 யாருக்கு அப்பால் உள்ள காணியில் மாற்றப்படுவதற்குப் புதிதாகக் கடைகள் கட்டப்படுகின்றன.

## வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான குளங்களை ஆழமாகத் தோண்டி மழை நீரை சேகரிப்பதன்மூலம் விவசாயத்தை விருத்திசெய்

## கிறிஸ்மஸ் கொண்டாட மாடுகள் களவாடினராம்

யாழ்ப்பாணம், சனி

கிறிஸ்மஸ் விழாவைக் குதூகலமாகக் கொண்டாட மாடுகளைக் களவாடி இறைச்சியடித்தார்களாம் இருவர். இவர்கள் இருவரையும் கோப்பாய்ப் பொலிஸார் கைதுசெய்தனர்.

தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த இரண்டு மாட்டுக் கன்றுகளைக் களவாடிய இருவரும், அவைகளை இரவோடு இரவாகவே இறைச்சியாக்கி உறவினர்களுக்கும் கொடுத்துக் குதூகலமாகக் கொண்டாடினார்களாம்.

உரிக்கப்பட்ட மாட்டின் தோலையும் மற்றும் பல உறுப்புக்களையும் கோப்பாய் பொலிஸ் சார்ஜண்ட் திரு. இராசமுத்தையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் மீட்டனர்.

சந்தேகநபர்களான சிவலிங்கமும், யேசுதாசனும் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பின்னர் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

(கா. நி)

## தேவாலயங்களில் திருட்டு

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயம், பெரியவிளான் புனித அருளப்பர் ஆலயம் ஆகிய தேவாலயங்களில் உண்டியல்கள் உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளன. இத்திருட்டுக்கள் பற்றிச் சங்கானைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பரீட்சையில் சித்தி

எழுதுமட்டுவாள், வெள்ளி

இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த திரு. சி. பற்குணம் இலங்கை

புதுவருட தினத்தில்

## காயமடைந்தவர் குறைவு

கோட்டை, வெள்ளி

நேற்று முன்தினம் புதுவருடக் கொண்டாட்டத்தையொட்டிஏராளமானபட்டாசுகள் கொளுத்தப்பட்டபோதும் கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் காயமுற்றவர்கள் தொகை மிகக்குறைவென அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டாஸ் வெடித்துபோது விபத்துக்குள்ளாகி காயமுற்றவர்களென இருவர் மாத்திரமே சிறிய காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதை விட புதுவருட தினத்தன்றும் அதற்கு முன்தினமும் காயமுற்றவர்கள் பலர் வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் அநேகர் ஒருவரையொருவர்தாக்கியதால் காயமுற்றவர்களெனக் கூறப்படுகிறது.

## சாவகச்சேரி எம். பி நடவடிக்கை

எழுதுமட்டுவாள், வெள்ளி

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கொடிகாமம், வரணி, எழுதுமட்டுவாள், மிருசுவில் ஆகிய இடங்களுக்கு தென் காரியாதிகாரியும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் நேரில் சென்று அவ்வப்பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் வெள்ள அழிவுகளையும், வெள்ள அகதிகளையும் பார்வையிட்டனர்.

## ஏழை மாணவர்க்கு இலவச புத்தகங்கள்

(யாழ்ப்பாணம்) அசோகன் - சோ - சந்திரபாபு
[தினசரி 4 காட்சிகள்] நடித்த

# அடிமைப்பெண்

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி நான்கு காட்சிகள்
நாகேஷ், விஜயநிர்மலா
வீரப்பன்; சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த

# சோப்பு, சீப்பு, கண்ணாடி

(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)

5 வது வெற்றி வாரம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த

# திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

இப்பகுதியில் காட்டுகின்ற அக்கறைக்கு பலன் உண்டு''.

கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. எம். கனகசபை பேசுகையில் ''இப்பகுதியில் கட்டவிருக்கும் செம்பன் குண்டு குளப் பாலத்தை ஒப்பந்தத்தில் விடாமல் பயிர்ச்செய்கை குழுவே தனது பணத்தில் கட்டி முடிக்க வேண்டும். அதற்குரிய பணத்தை கமத்தொழிற் பகுதி ஆணையாளரிடம் பெற்றுத் தரும்படி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். மகாலிங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**காவல் காரன்**

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**கல்யாண பரிசு**
புதிய கொப்பி

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-எல்விஜயலக்ஷ்மி
நடித்த
**உயிரா மானமா**

வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
சிவாஜி-பத்மினி கே ஆர்விஜயா
நடித்த
**இரு மலர்கள்**

## மனோகரா

யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**
பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்பு கொள்ளவும்
தொலைபேசி இல: 485

## REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.
Heyley Mills,
Shashi Kapoor
in
A MATTER OF INNOCENCE
(Panavision)

**தனுசு**- ஏக்கத்தின் சாயல் நிழல்போலத் தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வேதனையைத் தரும். முற்கோபத்தினால் கலகங்கள் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

**மகரம்**- வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராவீர். இனிக்கப்பேசி எதையும் சாதித்துவிடுவீர்கள். புதிய நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். பண வரவும் சரளமாக இருக்கும்.

**கும்பம்**- கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்

**மீனம்**- வட்டமிடும் கழுகுப்பார்வை உங்களை மிரட்டப்பார்க்கும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக் கூடும். மனதிலுள்ள திட்டங்களை வெளியில் சொல்லாதிருப்பது நன்று. திருப்தியற்ற தினம்.

# கிராம அபிவிருத்திக்குமேலும் உதவ அமைச்சு திட்டம்

கோட்டை, வெள்ளி

''கிராம வேலைகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய களஞ்சியமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி அமைச்சு அமைத்துவருகிறது. அபிவிருத்தித் திட்டங்களை கிராமசபைகள் செய்துமுடிப்பதற்கு சுலபமாகவே இவை அமைக்கப்படவுள்ளன.''

உள்ளூராட்சி அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு, கே. ஏ. சில்வா திருமலை மாவட்ட உள்ளூராட்சிமன்றத் தலைவர்களின் மகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

திரு. சில்வா மேலும் பேசுகையில் கிராமசபைகள விடுத்த வேலைகளுக்கான உபகரணங்களை பேப்பர் காப்பரேஷனிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி அமைச்சு செய்துவருகிறது என்றார்.

உதவி உளளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. வாமதேவன், உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சிவஞானம் ஆகியோரும் பேசினர்.

## தீப்பெட்டி தட்டுப்பாடு

எளுதுமட்டுவாள், வெள்ளி

மறவன்புலோ மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தீப்பெட்டிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

இங்கு தீப்பெட்டி வாங்குவது மிகவும் சிரமமான காரியமாயிருக்கிறதாம். தீப்பெட்டி வாங்குவதற்கு சாவகச்சேரிக்குச் செல்லவேண்டிய நிலையில் இப்பகுதி மக்கள் இருக்கின்றன.

தீவுப்பகுதி

## பங்கீட்டு அரிசி வியாபாரிகள் அவதி

அனலைதீவு, வெள்ளி

தீவுப்பகுதியிலுள்ள உத்தரவுபெற்ற வியாபாரிகள் தாங்கள் பங்கீடுசெய்யும் அரிசிக்குரிய ஏற்றுமதிக்கூலியான செலவீனத்தைக் கடந்த பத்து மாதங்களாகப் பெற முடியாமல் இருக்கின்றனராம்.

பங்கீட்டு அரிசி முறைக்கு அரசாங்கம் வழங்கும் செலவீனத்திலும் பார்க்க மூன்று பங்கு செலவு தீவுப்பகுதி வியாபாரிகளுக்கு கூடுதலாக முடிகின்ற போதிலும் அந்த ஒரு பங்கு செலவீனத்தையும் பெறமுடியாதிருக்கின்றது என இப்பகுதி வியாபாரிகள் கவலைதெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட செலவு தொகையையும் தீவுப்பகுதியையும் தீவுப்பகுதி பலநோக்க கூட்டுறவுச் சங்க சமாசத்தில் ரொக்கமாகப் பெறமுடிவதில்லையாம். ஏதும் சாமான்கள்வாங்கியே கழிக்கவேண்டியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது.

## 'ஏயர்போஸ்' வெற்றி

திருகோணமலை, வெள்ளி

திருமலை சன்றைஸ்ஸுக்கும் இலங்கை ஆகாயப் படையினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஆகாயப்படையினர் 4-2 கோல்களால் வெற்றிபெற்றனர்.

இப்போட்டியில் ஆகாயப் படையைச் சேர்ந்த இலங்கை விளையாட்டு வீரர் திரு. மைந்தா மூன்று கோல்களையும் திரு. முத்தலிப் ஒரு கோலையும் போட்டார்.

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான குளங்களை ஆழமாகத் தோண்டி மழை நீரை சேகரிப்பதன்மூலம் விவசாயத்தை விருத்திசெய்யலாம்' என்று கைதடிநாவற்குளி தெற்கில் நடந்த தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கூட்டத்தில், முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும்போது கூறினார்.

கீழ்க்காணுவோர் கைதடி நாவற்குளி தெற்கு வாலிப முன்னணி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. சி. யோகரத்தினம், உபதலைவர் திரு. க. சீனியர், காரியதரிசி: திரு. வை. நாகராசா, தனாதிகாரி: திரு. கி. சந்திரசேகரம், 17 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

சென்னை

## இசைவிழா இன்று முடிகிறது

சென்னை, ஜன 3

கடந்த மாதம் 27-ந் திகதி சென்னையில் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவில் ஆரம்பமான இசைவிழா நிகழ்ச்சிகள் இன்றுடன் முடிவடைகிறது இன்று பிற்பகல் விவேசா பைன் ஆர்ட்ஸ் கிளப் அளிக்கும் 'சோ'வின் 'மொகமத்-பின்-துகலது' என்னும் நாடகம் சிறு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

(இமை, நிரு.)

அரசாங்க

## ஊழியருக்கு சம்பள உயர்வு கிடைக்கிறது

கோட்டை, வெள்ளி

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியருக்கு இம் மாதம் முதல் சம்பள உயர்வு கிடைககிறது. இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதற்காகவருடமொன்றுக்கு ஐந்து கோடி ரூபாவரை மேலதிகமாகச் செலவிடப்படவிருக்கிறது.

சம்பள உயர்வின்படி சாதாரண ஊழியருக்கு 180 ரூபாவும், உயர்ந்த அதிகாரிகளின் சம்பளம் 2,150 ரூபாவுமாகயிருக்க வேண்டுமென சமரசிங்கா கமிட்டி சிபார்சு செய்துள்ளது. இதன்படி சம்பள உயர்வு வழங்க வேண்டுமென கமிட்டியின் சிபார்சை ஆராய்ந்த ஆறு நிரந்தரக்காரியதரிசிகள் நிதிமந்திரியிடம் சிபார்சு செய்துள்ளனர். இதுபற்றி நேற்று மந்திரிசபை ஆராய்ந்தது.

எழுதுமட்டுவாள், வெள்ளி

இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த திரு. சி. பற்குணம் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவரான இவர் கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்தவர்

## ரூ. 4,000 மேலதிக வருமானம்

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவு கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத்தலைவர் திரு. கா. மதியாபரணம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறியது. இந்த பட்ஜெட்டின் மூலம் கிராமசபைக்கு மேலதிகமாக 4 ஆயிரம் ரூபா வருமானமுண்டு.

யும், வெள்ள அகதிகளையும் பார்வையிட்டனர்.

## ஏழை மாணவர்க்கு இலவச புத்தகங்கள்

திருகோணமலை, வெள்ளி

திருமலையிலுள்ள ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகம் வழங்குவதென திருமலை நகரசபை தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்கும் ஏழை மாணவர்களின் எண்ணிக்கையை அப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்மூலம் தெரிந்து அம்மாணவர்களுக்கு இந்த ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை இலவசமாக வாங்கிக் கொடுப்பதென நகரசபை முடிவு செய்துள்ளது.

## ஒத்தி வைப்பு

திருகோணமலை, வெள்ளி

கம்பக பாவேரியனுக்கும் திருமலை யுனைட்டெட் கழகத்துக்குமிடையே நடைபெறவிருந்த உதைபந்தாட்டப்போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

விற்பனையாகின்றது!

# 1970 "ஈழநாடு" தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

# "ஈழநாடு" Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!

எமது பத்திரிகை விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் உதவி இல்லையென்றால் எதிப்து நிர்மூலமாகியிருக்கும்

## அதிபர் நாஸர் தகவல்

## இழந்தபகுதிகளை மீட்க 10 லட்சம் பேர் திரட்டப்படுவர்

### இஸ்ரேலை எதிர்ப்பதில் இனிமேல் சூடான் முக்கிய பங்கு ஏற்கும்

கார்ட்டூம், ஜனவரி 2

இஸ்ரேலியர் கைப்பற்றிக் கொண்டுள்ள அரபுப் பிரதேசங்களை மீட்பதற்கு இறுதிவெற்றிவரை போராடுவதற்கென 10லட்சம் அரபு வீரர்கள் சேர்க்கப்படுவதாக ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அப்துல் நாஸர் அறிவித்தார்.

ஏற்கனவே எல்லைஅரண்களில் 5லட்சம் அரபு வீரர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் மேலும் 5லட்சம்பேர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் என்றும் அதிபர் நாஸர் கூறினார்.

சூடான் அதிபருடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக அதிபர் நாஸர் கார்ட்டூம் வந்திருக்கிறார். பொதுகூட்டம் ஒன்றில் சூடான் அதிபரும் அரபுக்குடியரசு அதிபரும் பேசினார்கள்.

அரபுமக்கள் தோல்வியை ஒப்புக் கொள்வதில்லையென்று உறுதியோடு இருக்கிறார்கள் என்றுகுறிப்பிட்ட அதிபர் நாஸர் வெற்றிகிட்டும் வரைபோராடியே தீருவோம்என்று அறை கூவல் விடுத்தார்.

**ரஷ்யா பிரான்ஸ்**

அரபுநாடுகளுக்கு ஆதரவளித்ததற்காக சோவியத் யூனியனையும் பிரான்சையும் அதிபர் நாஸர் புகழ்ந்து பேசினார். சோவியத் ஆயுத உதவி இல்லையென்றால் அரபுக்குடியரசு நிர்மூலமாகியிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். பிரான்ஸ் அரபுகளின் கூட்டுநாடு என்று நாஸர் சொன்னார்.

சைனாய்ப்பகுதிக்கு முன்னதாகவே ஜெரூசலம், கோவான் பிரதேச மேற்குப் பகுதிஆகியவற்றைமீட்க விரும்புகிறோம் என்றார் நாஸர்.

சூடான் அதிபர் பேசுகையில் அரபுப் பிரதேசங்களை இஸ்ரேலியாவிடமிருந்து மீட்பதற்குசூடான் சகல உதவிகளையும் புரியும் என்றார். எதிர்காலத்தில் இஸ்ரேலுக்கெதிரான போரில் சூடான் முக்கிய பங்கெடுத்துக்கொள்ளும் என்றார்.

இதற்கிடையில் லெபனான் எல்லையிலிருந்து பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் இஸ்ரேல் மீது தொடர்ந்து கணை தொடுத்துவருவது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷிதயான் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் லெபனான் அரசுக்குமிடையில் ஏற்பட்ட சமரசஉடன்பாட்டுக்குப்பின்னர் லெபனான் எல்லையில் நிலைமை படுமோசமாகியிருப்பதாகவும் இது கட்டுப்படுத்தப் படாவிட்டால் கடும் எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தயான் லெபனான் அரசசை எச்சரித்திருக்கிறார்

**பீரங்கிப் படகு விவகாரம்**

பிரான்சிலிருந்து 5 பீரங்கிப் படகுகள் காணமல் போனதற்கும் இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று இஸ்ரேல் இதில் சம்பந்தப்படுவதற்கு இஸ்ரேலிய அதிகாரியொருவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

பிரான்சிலிருக்கும் இஸ்ரேலியர் ராஜ தந்திரிகள் இருவரை திருப்பியழைக்கும் படி பிரான்ஸ் கோரியிருப்பதையும் அவர் கண்டித்தார்.

இதற்கிடையில் பிரான்சி...

## 'ஓரளவாவது உரிமைகளைப் பெற்றோம்' — அமிர்தலிங்கம்

மாவிட்டபுரம், வெள்ளி

''தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து ...

...கும் நிறைந்த வேறுபாடுகள் உண்டு தமிழரசுக்கட்சி பேச்சுவார்த்தை நடத்தி...

## திருமலையில் தொழிலாளர் வேலைக்குத்திரும்புகின்றனர்

திருகோணமலை, வெள்ளி

திருமலையில் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முற்றுப் பெறுகின்ற நிலையில் இருக்கின்றது, பொறுமை இழந்த அநேக தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிய வண்ணம் இருப்பதாக அறியப்படுகின்றது.

துறைமுக வேலைநிறுத்தம் ஆரம்பமாகி இருபது நாட்களாகியும் எதுவிதபயனையும் பதிலையும் பெறமுடியாத நிலையில், ஏமாற்றத்தோடு யூனியன்களின் கட்டுப்பாட்டை மீறி அநேக தொழிலாளிகள் வேலைக்குத் திரும்புகிறார்களாம்.

இவ் வேலை நிறுத்தத்தில் பங்கு பங்குகொண்டிருக்கும் லிகிதர்மார்வேலைக்குத்திரும்பாமல் ஒரு முடிவுடனேயே திரும்புவது என்ற நிலையில் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருவதாகத் தெரிய வருகின்றது.

## "கூட்டுறவுச் சங்கமூலம் மீனவர்க்குகடன் வழங்குக"

திருக்கோணமலை, வெள்ளி

''மீனவர்களின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அரசாங்கம் பல உதவிகளைச் செய்துவருகிறது.''

சல்லி மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கக் கருத்தரங்கில் தலைமையுரை ஆற்றிய திருமலை கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் திரு. சிற்றம்பலம் இவ்வாறு கூறினார்.

இம்மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தின் கருத்தரங்கை திருமலை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் திரு பி.நெல்லிநாதன் திறம்பட ஒழுங்குசெய்திருந்தார். சல்லி மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கம் திறம்பட இயங்குவதாகக் கூட்டுறவு உதவி ஆணையாளர் பாராட்டினார்.

அரசாங்கம் விவசாயக் கடனைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் வழங்குவதுபோல், மீனவர்க்கு வழங்கும் கடனைக் கூட்டுறவுச் சங்கம் மூலமே வழங்கவேண்டுமென திரு. நெல்லிநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மீன்பிடிப்போருக்கான கடன்கள் சங்கம் மூலம் வழங்கப்பட்டால் மீனவர்கள் எதுவித இடையூறுமின்றிக் கடனைப் பெறுவார்கள். சங்கச் செயற்குழு மீனவர்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பதால்இவ்விதம் கடன் வழங்குவது பேருதவியாக இருக்கும் என்றார்.

அடுத்துப் பேசிய கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பரிசோதகர் திரு. கே. மகாலிங்கம் பேசுகையில் ''சேமிப்பு ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது. அப்படிச் சேமித்து வைத்தால் கடலுக்குச் செல்லமுடியாத காலநிலையில், நோயுற்ற வேளையில், முதுமையில் சேமிப்பு அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும் பேருதவியாக இருக்கும்'' என்றார்.

## ந[illegible]ரத்தினசாமி நீச்சல்தடா[illegible] வேலைகள் ஆரம்பமாகிறது

ப[illegible], வெள்ளி

பாக்குநீரிணையை நீந்திக் க[illegible] சாதனை நிலைநாட்டி ...

### சனசமூகநிலைய...

## நாடெங்கிலும் வெள்ளச் சேதம்:

# 20,000 மீனவர்களுக்கு 5 நாட்களாக வருமானமில்லை

கோட்டை, வெள்ளி

நீர்கொழும்பு கரைப் பகுதியில் வாழும் 20,000 மீனவர்களுக்கு கடந்த 5 தினங்களாக எவ்வித வருமானமுமின்றி புத்தாண்டு பிறந்தது. கடல் கொந்தளிப்பும், கடும் காற்றும் இருந்ததால் மீனவர்கள் கடல் பக்கமே போகவில்லை. அத்துடன் விடாது மழையும் பெய்துகொண்டிருந்தது.

மீன்பிடி இலாகாவும், மற்றும் இங்குள்ள பொது நிறுவனங்களும் இந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கியது.

நீர்கொழும்பு பஸ் நிலையத்தில் 2 அடி நீர் நேற்று வரை நின்றுகொண்டிருந்தது. வீதிகள்போக்குவரத்துச் செய்யமுடியாதபடி மிகவும் மோசமான நிலைக்குள்ளாகியுள்ளது.

0 0 0

**வட - மத்திய பகுதி**

அநுராதபுரமாவட்டத்தில் விடாது பெய்த மழையினால் குளங்கள் நிரம்பி வழியத் தொடங்கின. இப்போது நிலைமை சீரடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

அநுராதபுர மாவட்ட என்ஜினியர் திரு. ஏ. எஸ். டி. சில்வா தனது உத்தியோகத்தர்களுடன் குளங் நிரம்பிய பகுதிகளுக்கு வந்து பார்வையிட்டார். அநுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. இவான் சமரவிக்கிரம மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

0

**ஊவா மாகாணம்**

ஊவா மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணமாக சமூக சேவைப் பகுதி 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. உணவு, தற்காலிக வீடு, உடை வசதி செய்து கொடுப்பதற்கு இந்தப் பணம் உதவும்.

பதுளைக் கச்சேரி முன்னால் பெரிய மரமொன்று விழுந்திருப்பதால் போக்குவரத்து தடைப்பப்பட்டுள்ளது. மரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0 0 0

**மத்திய மாகாணம்**

**புங்குடுதீவில்**

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவில் வெள்ளத்தால் பெரும் சேதமேற்பட்டுள்ளது. பயிர்ச்செய்கை கூடுதலாக அழிந்துள்ளது. குடியேற்றத் திட்டங்கள், பள்ளக் காணிகள் முதலியவற்றிலுள்ள மக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். புங்குடுதீவில் சேதமடைந்த இடங்களையும், சரவணை, புளியங்கூடல், சுருவில், வேலணை, கரம்பன், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களையும் தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறும் திரு. நவரத்தினம் சமூகசேவைப் பகுதியினரைக் கேட்டுள்ளார். புகையிலைச் செய்கை, வெங்காயச் செய்கை முதலியனவும் தீவுப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.

0 0 0

**நாவலப்பிட்டியில்**

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி பகுதியில் பெருமழை தொடர்ந்து பெய்து கொண்டிருப்பதால் தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

## வெள்ள அபாயம் நீங்குகிறது

விஸ்வமடு, வெள்ளி

விஸ்வமடுப் பகுதியில் மழை நின்று வெள்ள அபாயம் சற்றுக் குறைந்து வெய்யில் எறிக்க ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து இப்படி வெய்யில் எறிக்குமானால் பாதைகளில் குறைந்துஓடிக் கொண்டிருக்கும் வெள்ளமும் நீங்கி இன்னும் மூன்று நாட்களில் விஸ்வமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளுக்கு வாகனம் போக்குவரத்து நடைபெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மழைக்காலங்களில்புற்றில் இருந்து புறப்பட்டுவரும் ஈசல் கூட்டங்களைப்போல மழைக்குப் பயந்து பள்ளிக்கூடங்கள், கடைகள்ஆகியனவற்றில் அடைக்கலம் புகுந்திருந்த மக்கள் தற்போது உலவி தமது சொந்தவேலைகளை கவனிக்க ஆரம்பித்துள்ளனர்.

நேற்று தர்மபுரம் பகுதியில் பாலமே தெரியாமல் வெள்ளக்காடாக காட்சி அளித்த நெத்தலி ஆற்றுப் பாலமும், சின்ன ஆற்றுப் பாலமும், மாணிக்க பிள்ளையார் கங்கைநீரோட்டமும் இப்போது எவ்வளவோ குறைந்துள்ளது. தற்போது வெள்ள அபாயத்தினால் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விஸ்வமடு விவசாயப்படை முகாம் வீரர்களின் வேதனம் இம்மாதம் 8ம் 9ம் திகதிக்குள் வழங்கப்படலாமென்றும், இதற்கு வீரர்களுக்கு தனித்தனியே தபால் மூலம் அறிவிக்கப்படலாமென்றும் தெரியவருகின்றது.

0 0 0

## விஸ்வமடுவிவசாயப்படைவீரர்கள்நிலை

விஸ்வமடு, வெளளி

தொடர்ந்து பெய்துவரும் கடும்மழை காரண்மாக விஸ்வமடுப்பகுதியில் வெள்ளம் தேங்கிநிற்பதன் காரணமாக வேலைசெய்ய முடியாதிருப்பதாகவும் எனவே மீண்டும் அழைக்கப்படும்வரை விஸ்வமடு விவசாயப் படை வீரர்களை அவரவர் வீடுகளுக்குச் செல்லுமாறும் படைமுகாம் அதிகாரி கேட்டுள்ளதாகவும் இது விவசாயப்படை வீரர்களுக்கு அதிருப்தியளித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

கடந்த இருவருட காலமாகத் தாம் தேசிய அரசாங்... மற்றதென்றும், பலகஷ்டங்களிலும் நொந்துபோயிருக்கும் தாம் குடும்பத்தில் பெரும் பொறுப்புகளுடனிருப்பதாகவும், ஒரு நாளேனும் வேலையில்லாவிட்டால் அதுகுடும்பத்தைப் பாதிக்குமென்றும் மேலதிகாரியிடம் கேட்டதற்கு மேலிடத்து உத்தரவையே தாம் செயற்படுத்துவதாகத் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

மற்றும் அரசாங்க படைவீரர்களைப்போல் வேலை செய்யும் காலம் வரும்வரை தம்மையும் அரசாங்கம் ஆதரிக்கவேண்டுமென்றுகோரும் மகஜரை இவ்வீரர்கள் பிரத...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஓரளவாவது உரிமைகளைப் பெற்றோம்' — அமிர்தலிங்கம்

மாவிட்டபுரம், வெள்ளி
''தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து பூரண உரிமைகளைப் பெற முடியாவிட்டாலும் ஓரளவாவது உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ளது'' இவ்வாறு தெல்லிப்பழையிலுள்ள தமிரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் இல்லத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய வட்டுக்கோட்டைபாராளுமன்ற உறுப்பினர் திரு அ அமிர்தலிங்கம் கூறினுர்

திரு வ சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் ''இலங்கை தமிரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததற்கும் தமிழ்க்காங்கிரஸ் சேர்ந்ததற்கும் நிறைந்த வேறுபாடுகள் உண்டு தமிழரசுக்கட்சி பேச்சுவார்த்தை நடத்தி தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறக்கூடிய முறையிலேயே தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தது ஆனுல் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அந்நிலையில் இல்லை

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் பேசுகையில்: திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமையவேண்டிய அவசியம்பற்றி வலியுறுத்திப்பேசிய அவர் திருமலையில் மத்திய பீடமும், யாழ் நகரில் வைத்திய பிரிவும் அமைக்கப்படவேண்டும்'' என்று கூறினுர்

செனட்டர் சு நடராசா திரு ஸ்ரீமோகன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினுர்கள்.

## தாக்கப்பட்டநபர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

மாவிட்டபுரம், வெள்ளி
வீதியால் சென்ற நபரை மறைந்துநின்று தாக்கினுர்களாம்நால்வர். இச்சம்பவம் காங்கேசன்துறைப் பகுதிக்குட்பட்ட தையிட்டியில் நேற்றுநடைபெற்றது.

தையிட்டியைச் சேர்ந்த கதிர்காமர் அருளம்பலம் என்பவர் வீதியால் சென்றுகொண்டு இருக்கும்போது, இவருடன் தோட்டத்தகராறு காரணமாக கோபம் அடைந்திருந்த நால்வர் ஒன்ருகச் சேர்ந்து இவரைப் பொல்லால் தாக்கினுர்களாம்.

இதில் படுகாயமடைந்த நபர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்ருர்.

இதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் குணரத்தினம் என்பவரையும் ஒருவர் தாக்கியதாக பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. பொல்லால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்த குணரத்தினம் தற்போது சிகிச்சை பெறுகிருர்.

வடக்கில் நேற்று முதல்

## 5 ஏ.எஸ்.பி.கள் நியமனம்; யாழ்ப்பாணம் இரண்டுபிரிவு

யாழ்ப்பாணம், சனி
ஓர் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டனின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த யாழ்ப்பாணப் பொலிஸ் பகுதி நேற்றுமுதல் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கில் மொத்தம் 5 உதவிபொலிஸ் சுப்ரின்டன்கள் நேற்று முதல் கடமையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நல்லூர், கரையூர் பொலிஸ் நிலையங்கள் உதவிபொலிஸ்சுப்பிரின்டன் திரு. சர்மதாச சில்வாவின் நிர்வாகத்தில் இயங்கும்.

கிளிநொச்சியிலிருந்து இடமாற்றலாகி யாழ்ப்பாணம் வந்திருக்கும் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு என் என் டி சில்வாவின் நிர்வாகத்தில் கோப்பாய், ஆனைக்கோட்டை, சாவகச்சேரி, பளை பொலிஸ் நிலையங்கள் இயங்கும்.

கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரின்டனுக நேற்றுமுதல் திரு இராஜகுரு நியமனம் பெற்றுள்ளார். இவரது நிர்வாகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆனையிறவு, வவுனியா பொலிஸ் நிலையங்களும், மன்னுர் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் நிர்வாகத்தில் மன்னுர், தலைமன்னுர் பொலிஸ் நிலையங்களும், காங்கேசன் துறை உதவி பொலிஸ் சுப்பிரின்டன் நிர்வாகத்தின்கீழ் சுன்னுகம், சங்கானை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி பொலிஸ் நிலையங்களும் இயங்கும்.

(கா.நி)

காரியொருவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

பிரான்சிலிருக்கும் இஸ்ரேலியர் ராஜதந்திரிகள் இருவரை திருப்பியழைக்கும் படி பிரான்ஸ் கோரியிருப்பதையும் அவர் கண்டித்தார். இதற்கிடையில் பிரான்சிலுள்ள இஸ்ரேலிய வர்த்தக குழுத்தலைவர் லிஞேன் என்பவரைத் திருப்பியழைக்கும்படி பிரான்சு அரசு இஸ்ரேலைக் கேட்டிருக்கின்றது. இவர் பிரான்சில் விரும்பத்தகாதவர் என்று பிரயன்ஸ் அறிவித்துள்ளது. பிரான்ஸ் பீரங்கிப்படகுகள் கொள்முதலில் இவர் முக்கிய பங்கெடுத்துக் கொண்டதாக பிரான்ஸ் கருதுகின்றது.

## கரடியைக் கொன்ற சிறுமி

ஸ்ரீநகர், ஜன. 2
காஷ்மீரில் ஒரு 16 வயதுச்சிறுமி பொரியபயங்கரமான கரடியொன்றை வெட்டிக் கொன்றிருக்கிருர். இரவுநேரத்தில் இப்பெரிய கரடி இந்தப் பெண்ணும் குடும்பத்தினரும் உறங்கிய குடிசையைத் தாக்கிக் கொண்டிருந்ததாகவும், உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட சிறுமி வெளியில்வந்து கரடியுடன் போராடி கோடரியினுல் அதனை வெட்டித் தள்ளினுராம். கரடி கீழே விழுந்து உயிர்நீத்தது. சிறுமிக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

## ரஷ்ய-சீன எல்லைப்பேச்சு

மாஸ்கோ, ஜன 2
சீனுவுக்கும் சோவியத் யூனியனுக்கு மிடையிலான எல்லைத் தகராறு சமரசப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கான சோவியத்கோஷ்டியின் தலைவர் திரு. குஸ்னட்சோவ் பீகிங் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

## 40 அமெரிக்கர் கொல்லப்பட்டனராம்

சைக்கோன், ஜன. 2
1961-ம் ஆண்டிலிருந்து இதுவரை 40 ஆயிரம் அமெரிக்கர்கள் வியட்னும் போரில் கொல்லப்பட்டிருக்கிருர்கள். வியட்காங்கியருடம்வடவியட்னுமியருமாக சுமார் ஆறுலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் சொல்லப்பட்டிருக்கிருர்கள். இத்தகவலை அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நவரத்தினசாமி நீச்சல்தடாக வேலைகள் ஆரம்பமாகிறது

பருத்தித்துறை, வெள்ளி
பாக்குநீரிணையை நீந்திக் கடந்து ஈழத்து வரலாற்றிலேயே ஒரு சாதனையை நிலைநாட்டி மறைந்த நீச்சல் வீரர் திரு. எம். நவரத்தினசாமியின் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை தபாற்கந்தோருக்கு எதிராக உள்ள கடகற்ரைப்பகுதியில் பல ஆண்டுகளுக்குமுன் அடிக்கல்நாட்டப்பட்ட நீச்சல் தடாக பூர்வாங்க வேலைகள் இம்மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன: அநேகமாக அடுத்த தேர்தல்காலத்தின் முன் இத்தடாகம் பொது மக்களின் உபயோகத்துக்கு விடப்படுமெனத்தெரிகிறது. பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அமைக்கப்படும் இத்தடாகம் பருத்தித்துறை புதிய நகரசபை நிர்வாகத்தினரால்வழங்கப்படும் மின்சார வசதிகளையும் பெறலாமெனத் தெரிகிறது. உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய பல அம்சங்கள் இதில் சேர்க்கப்பட விருக்கின்றன. இப்பகுதியில் ஏககாலத்தில் பல வாகனங்கள் வந்து தங்கிச்செல்வதற்கான வசதிகளும் ஒழுங்குசெய்யப்படுகின்றன.

## சனசமூகநிலைய பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி
மானிப்பாய் ஸ்ரீ பாரதி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் மானிப்பாய் ஞானவைரவர் ஆலய முன்றலில் ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. ஒரு பிரஜைக்கு இருக்க வேண்டிய சமுதாயப் பொறுப்புகள் பற்றி விளக்கியதோடு ஐக்கியத்தின் அவசியம்பற்றியும் வலியுறுத்தினுர்.

மானிப்பாய் பட்டின சபைத் தலைவர் திரு. சி இராசேந்திரம் பேசுகையில் இச்சனசமூக நிலையத்துக்கு பட்டினசபையால் அளிக்கக்கூடிய உதவிகளைச் செய்வதாகக் கூறினுர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு செ அப்புத்துரை, உபதலைவர்: திரு க செல்லத்துரை, செயலாளர் திரு க திருநாவுக்கரசு, உபசெயலாளர்: திரு ச சிவஞானம், பொருளாளர்: திரு வ சி சிவசுப்பிரமணியம், கலைகலாச்சாரப் பிரிவுத் தலைவர்: திரு அ ச ஐயாத்துரை, விளையாட்டுப் பிரிவுச் செயலாளர்: திரு செ கமலபாபர்தம், கணக்காய்வாளர்: திரு வ திருநாவுக்கரசு, காப்பாளர்: திரு சி இராசேந்திரம், உபகாப்பாளர்: திரு கு மாரிமுத்து, திரு ம வயிரமுத்து.

பதினெரு பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டதோடு பாலர் கல்வி மன்றம், நாடகமன்றம், கூட்டுப் பிரார்த்தனை மன்றம் என்பனவும் அமைக்கப்பட்டன.

## அ.இ.சி.த. மகாசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி
அ.இ.சி.த. மகாசபையின் வடமராட்சிக் கிளையின் பொது நிர்வாக சபைக் கூட்டம் தலைவர் திரு. மு. செல்லபாக்கியம் தலைமையில் துன்னலை தெற்கு தயாநிதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கீழ்க்குறிப்பிடும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. கிளிநொச்சிப் பகுதியில் விவசாயக் காணி அரசாங்கத்திடம் பெற்று கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தலும்- உபஉணவு பயிரிடுதலும் வல்வெட்டியில் உள்ள ''விருச்சி'' என்ற பெயர் உள்ள முடிக்குரிய நிலங்களை அப்பகுதியில் உள்ள நிலம்அற்ற சிறுபான்மைத் தமிழ் குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல்; துன்னலை தெற்கு பூதராயர் அரசினர் பாடசாலைக்கு ஒரு சிறுபான்மைத் தமிழரைத் தலைமை ஆசிரியராக நியமிக்குமாறு வேண்டுதல்; கொடிதினம் மூலம் நிதிதிரட்டுதல்.

காரியதரிசி திரு. எஸ். வடிவேலு, மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு எஸ் செல்லையா உட்பட பலர் பேசினர்.

## கிருமிநாசினி தெளித்தவர்

மூதூர், வெள்ளி
நெற்பயிருக்கு கிருமிநாசினி தெளித்துக்கொண்டிருந்த விவசாயி ஒருவர் திடீரென மரணமானுர். இச்சம்பவம் கிண்ணியா 96 கொலனியில் நடந்தது. பிச்சைத்தம்பி சம்சூத்தீன் என்பவரே மரணமானவராவார். மூதூர் அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு அவர் மரணமாஞர். இம் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி மாட்டீன் சில்வா மரணவிசாரணை நடத்திஞர்.

ஞல் பெரிய மரமொன்று விழுந்திருப்பதால் போக்குவரத்து தடைப்பப்பட்டுள்ளது. மரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0 0 0

**மத்திய மாகாணம்**

மாத்தளைப் பகுதியும் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து பல பகுதிகளுக்கும் இருந்த பஸ் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. விடாது பெய்த மழையினுல் போக்குவரத்துச் செய்ய முடியாதபடி பாதை மோசமாக சீரடைந்துள்ளது. லாகலைப் பகுதியும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

0 0 0

**தென்மாகாணம்**

தென் மாகாணத்திலுள்ள உருளைக்கிழங்கு பயிர் மிகவும் பெருமழையினுல் பாதிக்கப் பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அம்பலாங் கொடைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மாதம்பை ஹங்கா பெருக்கெடுத்தது. ஆனுலும் இப்போது அதன் சீற்றம் தணியத்தொடங்கி யிருக்கிறது.

ரப்பர், தென்னந் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கடந்த 5 நாட்களாக வேலைக்குச் செல்லவில்லை. மீனவர்களும் கடலுக்குச் செல்லவில்லை. வெலிகம பகுதியில் 5பேரை பெரு வெள்ளம் தனக்கு இரையாக்கி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் இப்போது இங்கு நிலைமை சீரடைந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மாத்தறைப்பகுதியில் எட்டுப்பேர் பெருமழைக்குப் பலியாகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. கம்புறுப்பிட்டியாவில் இருவரும் கிற்றற்றியாவில் மூவரும் கப்புகம, மத்துகம ஆகிய இடங்களில் மூவரும் மாண்டு போனவர்களாவர். மாத்தறை அரசாங்க அதிபர் திரு மஹிவிக்கிரமரத்தின வெள்ளநிலைமையைச் சீராக்கநடவடிக்கைமேற்கொண்டுள்ளார்.

0 0 0

**மூதூரில்**

மூதூர், வெள்ளி
மூதூர்பகுதியில்கடும்மழை பெய்து கொண்டிருக்கிறது. திருமலை மூதூர் மோட்டார் படகுச்சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதனுல் சிலபாவனைப் பொருட்களுக்கு விலையும் கூடியுள்ளது. அத்துடன் மூதூர் கடலோரப்பகுதிகள் கடலரிப்பால் பெரும்பகுதி நீரினுள் அமிழ்ந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

செல்லுமாறும் படைமுகாம் அதிகாரி கேட்டுள்ளதாகவும் இது விவசாயப்படை வீரர்களுக்கு அதிருப்தியளித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

கடந்த இருவருட காலமாகத் தாம் தேசிய அரசாங்கத்திற்காக வியர்வைசிந்தி உழைத்துள்ளதாகவும், விவசாயப் படையையே நம்பி வாழ்க்கையை ஆரம்பித்த தம்மை எவ்வித முன்னறிவித்தலுமின்றிச் சம்பளமில்லாத லீவில் செல்லுமாறு திடீரெனக் கேட்பது நியாயபடுத்துவதாகத் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

மற்றும் அரசாங்க படைவீரர்களைப்போல் வேலை செய்யும் காலம் வரும்வரை தம்மையும் அரசாங்கம் ஆதரிக்கவேண்டுமென்றுகோரும் மகஜரை இவ்வீரர்கள் பிரதமருக்கும் மற்றும் தமிழ் எம். பி.க்களுக்கும் அனுப்பவிருக்கின்றனராம்.

மழைவிட்டு, நீர்வற்றி, நிலம்உலர்ந்து மீண்டும் வேலைகள் ஆரம்பிக்க இன்னும் சுமார் இருவார காலமாகுமென நம்பப்படுகிறது.

## முல்லைத்தீவு பகுதியில் வெள்ள நிலைமை

முல்லைத்தீவு, வெள்ளி
முல்லைத்தீவுப் பகுதியில் பெருமழைகாரணமாக குளங்கள் யாவும் உடைந்துள்ளன, பெருவெள்ளம் தாக்கியதால் சின்னுத்தங்காட்டு மக்கள் சிரமதானம் மூலம் கட்டிய சின்னுத்தம் அணை உடைப்பெடுத்துள்ளது, ஆயிரக்கணக்கானேர் பாதிக்கப்படடுள்ளதாக அறியப்படுகிறது. பலர் பல பிரிவாகப் பிரிந்து பாடசாலைகளிலும், நீதிமன்றங்களிலும் தனிப் பட்டோரின் கடைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களுக்கு முல்லைத்தீவுப் பட்டினசபை இலவசமாக உணவு வழங்கி வருகிறது. பட்டினசபை உபதலைவர் திரு. அ வெ. அருளப்பு, மற்றும் அங்கத்தவர்களும் முல்லைத்தீவுக் கிராமசேவையாளர் திரு க, கதிர்காமு ஆகியோரும் கொட்டும் மழையையும் பாராது மக்கட்குச் சேவை செய்துவருகின்றனர். காரியாதிகாரி திரு சொ. கணேசநாதன் மக்களுக்கு நிவாரணம் வழங்கச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். வயல்களும் ரோடுகளும் ஒரே வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த உடையாகட்டு, தேவிபுரம். சுதந்திரபுரம் ஆகிய குடியேற்றத் திட்டங்கள் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து மழை பெய்வதால் கடல் கெம்பி கடற்தண்ணீர் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும் என அஞ்சுகின்றனர். தாழ்ந்த பிரதேசங்களில் குடியிருப்போரை உடனடியாக பாடசாலைகளுக்குள போயிருக்குமாறு காரியாதிகாரி கேட்டுள்ளார்.

முல்லைத்தீவுப் பொலிஸாரின் விடுதியில் மட்டும் 2 அடித் தண்ணீர் நிற்பதால் பொலிஸார் நீதிமன்றத்தில் தஞ்சம் புகுந்தனர்.

வவனியா எம் பி திரு தா சிவசிதம்பரம், அரசாங்க அதிபர் பி சி பெரேரா காரியாதிகாரி திரு சோ கணேசநாதன் ஆகியோர் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

மககளுக்கு உடனடியாக மாவும் சீனியும் இலவசமாக வழ குமாறு அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## வடமராட்சியில் பயிர் அழிவு

பருத்தித்துறை, வெள்ளி
கடந்தசில நாட்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக வடமராட்சிப்பகுதியில் புகையிலை, கத்தரி, வெங்காயம், மிளகாய் ஆகிய பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை நீடிக்குமாயின் நெற்கதிர்களும் நீரிற் சாயவேண்டியநிலைமை ஏற்படலாமென விவசாயிகள் பீதியடைகின்றனர். அநேகமான பயிர்ச்செய்கையாளர் மீண்டும் புகையிலை நாற்றுவாங்கி நடவேண்டிய நிலைஏற்படலாமென அஞ்சுகின்றனர். மழையின்காரணமாக நெல்வயல்களுக்கு மத்தியிலுள்ள சில குளங்கள் நிரம்பி வழியும் தறுவாயில் இருக்கின்றன. சிலநாட்களாக மீனவர்கள் கடலுக்குப்போசாத காரணத்தால் பருத்தித்துறை, பொலிகண்டி, நெல்லியடி, கோயிற்சந்தை ஆகிய பகுதிகளிலுள்ள மீன் சந்தைகள் வெறிதாகக் கிடக்கின்றன. பருத்தித்துறை, நெல்லியடி தியேட்டர்களில் சில் நாட்களாக இரவுநேர இரண்டாம் காட்சி நடக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இறைவனது விருப்பமின்றி அணுவும் அசைவதில்லை. அவர் அனுமதியின்றி சிறிய புல்லும் முளைப்பதில்லை, அவருடைய அனுமதியினுல் தான் 'சைத்தான்' கூட இங்கே இருக்கிறது. கடவுளுக்குத் தெரியாமல் சைத்தானும் இங்கே இருக்க முடியாது,—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

**Eelanadu National Tamil Daily**
**Telegram: "EELANADU" Jaffna.**
**Post Box: 49, Jaffna. Telephone: 889.**

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 19-ந் திகதி (3-1-70)


## தேசிய இளைஞர் சேவை

தேசிய இளைஞர்சேவையில் சேர்வதற்கு யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இளைஞர்கள் முன் வருகிருர்களில்லையென்று உடுவில் பிரதிநிதி சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கவலை தெரிவித்திருந்தார். தேசிய இளைஞர் சேவையை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. இச் சேவையை ஆரம்பித்துவைப்பதற்கு இங்கு ராஜாங்க அமைச்சர் திரு. ஜே ஆர், ஜயவர்த்தன வருவதாக இருந்தார். அவரது வருகையும் இதனுல் தடைப்பட்டிருக்கிறது. ஓர் இடத்தில் தேசிய இளைஞர் சேவை அமைப்பதென்றுல் முதலில் நூறு இளைஞர்களாவது அதில் சேர முன்வரவேண்டுமாம்.

தேசிய இளைஞர் சேவையை இங்கு ஆரம்பிப்பதற்கு இப் பகுதியிலுள்ள ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் பலர் பெரும் முயற்சியெடுத்து இளைஞர்களை இச் சேவையில் சேரும்படி ஊக்கப்படுத்தியும் அதில் சேர முன்வந்தவர்களின் தொகை நூற்றுக்கும் குறைவுதானும்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களே இல்லையா? அல்லது வேலையற்ற இளைஞர்கள் இல்லையா? யாழ்ப்பாணத்தெருக்களில் ஒருதடவை சென்றவர்கள் இப்படியொரு கேள்வியைக் கேட்கத் துணியமாட்டார்கள். வேலையற்ற வாலிபர் அதிலும் படித்த வாலிபர் இங்கு நிறைய இருக்கின்றனர்' வேலை தேடிக் கொடுக்கும் தொழிற் கந்தோரில் பதிவு செய்திருக்கும் வாலிபர்கள் கொஞ்சமல்ல. 'வேலைவேண்டும் எப்படியும் என்னையும் எங்கேயாவது சேர்த்துவிடுங்கள் என்று ஆட்சிமன்றப் பிரதிநிதிகளிடம் படையெடுக்கும் வாலிபர்களுக்கும் குறைவில்லை. ஆனுல் இவர்கள் தேசிய இளை...

அந்தஸ்து பார்க்கும் நாற்கலி உத்தியோக மோகம காரணமாக இருக்க வேண்டும்.

காரணம் எதுவானுலும் தேசிய இளைஞர் சேவையை இங்கு அமைக்கும் சந்தர்ப்பத்தை இங்குள்ள வாலிபர்கள் இழந்துவிடக் கூடாது. சிரமதான இயக்கங்கள் இங்கு பல இடங்களிலும் நடைபெறுகின்றன. பலரும் கலந்துகொள்கின்றனர். இதன்மூலம் நல்யி சேவை செய்கின்றனர். தேசிய இளைஞர் சேவையும் சிரமதானம் போன்றது தானும். ஆனுல் உழைப்புக்கு ஊதியம் கிடைக்கும்.

தேசிய இளைஞர் சேவையில் சேரும இளைஞர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்குத்தான் வேலை. நாளொன்றுக்கு மூன்று ரூபாய் சம்பளம். இரண்டு ரூபாய் இளைஞரின் கையில் கிடைக்கும் மிகுதி ஒரு ரூபாய் அவரது பெயரில் சேமிப்பு வங்கியில் கட்டப்படும். வாரத்தில் ஓர் இளைஞனுக்கு பத்து ரூபாய் கிடைக்கும். அதே சமயம் ஐந்து ரூபாய்அவர் சேமிக்கவும்முடியும். வாரத்தில் ஐந்து நாளும் தொடர்ந்து வேலை செய்யும் இளைஞர்களுக்கு அவர்களுடைய அடையாள அட்டைகளில் புள்ளியிடப்படும். இளைஞர் ஒருவர் வேறு உத்தியோகத்துக்கு செல்வதற்காக நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும்பொழுதும் வேறு பயிற்சிக்குச் செல்லும்பொழுதும் இந்தப் புள்ளிகள் அவருக்கு உத்தியோகம் கிடைப்பதற்கு உதவி செய்யும்.

தேசிய இளைஞர் சேவையில் சேரும் இளைஞர்கள்ஊதியம் பெறுவதுடன் சேமிக்கவும் அதே சமயம் வேறு தொழில்களுக்கான நல் வாய்ப்பும் பெற முடியும். இந்த வசதிகளை இதர மாகாணங்களிலுள்ள இளைஞர்கள் பயன்படுத்தும்போது யாழ்ப்...

# தமிழருக்கு பல்கலைக்கழகம்
# கட்சி முரண்பாட்டை வைத்து தட்டிக்கழிப்பது சரியல்ல

தேசிய உயர்கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலலசேகராவுக்கு தமிழருக்கான பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக யாழ்ப்பாணம் 'சிவப்பிரகாசம் வீதி திரு. மு. மகாலிங்கம் அனுப்பியுள்ள மகஜரில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் விடயம் தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ் ஆகிய இரு அரசியல் கட்சிகளிடையே முரண்பாடான விவாதத்துக்குரிய விஷயமாகிவிட்டது. இந்த முரண்பாட்டை ஆதாரமாக வைத்து, தமிழ் மக்களுக்கு பிரத்தியேகமாக ஒரு பல்கலைக்கழகம் இருக்க வேண்டிய அவசியத்தை உணராமல், அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கையை தட்டிக்கழிக்க உபயோகப் படுத்துகிறது. ஒரு பல்கலைக்கழகம் எமக்கு ஏன் வேண்டும் என்பதற் குரிய நியாயங்களை நான் எடுத்துக் கூறுமுன். தமிழரசுக் கட்சியோ அன்றித் தமிழ்க் காங்கிரசோ எல்லாத் தமிழர்களின் சார்பிலும் பேசுவதற்கு அருகதையற்ற வகைகள் என்பதைக் கூற விரும்புகிறேன். தமிழரசுக் கட்சியுடனே அன்றி தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனே சேராதா அனேக தமிழர்கள் இருக்கிருர்கள். ஆகவே தங்கள்பாராளுமன்றப்பிரதிநிதித்துவத்தைப் பொறுத்து இக்கட்சிகள் இவ்விடயத்தில் பேசுவதற்குக் கோரும் உரிமைகள், இவ்விடயத்தைப் பரிசீலிப்பதற்கு அடிப்படையாக அமைய முடியாது.

தேசிய ஒற்றுமைக்காகவும் இந்நாடு பூராவின் தேவைகளுக்காகவும் பணியாற்ற இ[illegible]க்கும் ஓர் அரசாங்கம் கல்வி விடயத்தை அதாவது தமிழருக்கு ஓர் பல்கலைக்கழகம் அமைக்கும் விடயத்தை குறுகிய அரசியல் கட்சி முரண்பாடுகளுக்கப்பால் வைத்துத் தீர்மானிக்க வேண்டும். இத் தொடர்பில் பேராதனை, கொழும்பு, வித்தியோதய, வித்தியலங்கார ஆகிய பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கு முன்...

திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப சீவிக்கும் வாய்ப்பும் அமையப் பெறவேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் இத்தகைய வசதிகள் போதுமான அளவு கிடைப்பதில்லை.

(ஈ) வெளி ஊர் களுக்குச் சென்று படிப்பதற்குச் செலவாகும் கூடுதலான பனம் பளுவைக் குறைத்து, தகுதியும் ஆர்வமும் உள்ள பிள்ளைகளுக்கு, அவர்கள் தங்கள் நிதிநிலமையால் பாதிக்கப்படாமல், வேறுபாடில்லாமல் உயர்கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்துவது.

சுதந்திரமான மனே வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், முட்டுக்கட்டையாகவுள்ள சாதிவிகிதாசார அடிப்படையிலெழும் நியாயமற்ற போட்டியைக் குறைப்பது.

பரபட்சமற்ற முறையில் நடுநிலை நின்று இவ்விடயத்தில் தீர்வு காண்பதற்கு மேலே தரப்பட்ட நியாயங்கள், ஒரு சுமுகமான நியாயமான அடிப்படையாக அமைய முடியும் என்பது எனது கருத்தாகும்.

**-மு. மகாலிங்கம்-**

இப்பல்கலைக்கழகம்எங்கே நிறுவப்பட வேண்டும் என்பதுபற்றி வெளிப்படையாக முரண்பாடான அபிப்பிராயங்கள் இருந்தபோதிலும், அவ்வளவு ஆழமான வேற்றுமையாகவில்லை. எனினும் இவ்வபிப்பிராயங்கள் எதுவாகவிருந்தாலும், இவைகளும் குறுகிய அரசியல் காரணங்களால் உந்தப்பட்ட பிரத்தியட்சமான நியாய அடிப்படையில் ஏழாதவையாகும். ஆகவே பின்வரும் காரணங்களை அளவுகோலாகக் கொண்டு, பாரபட்சமில்லாமல், நியாயமான முறையில் சிந்திப்பதாயின், பின்வரும் உண்மையான காரணங்களின் அடிப்படையிலேதான் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(அ) தமிழர் பெருவாரியாக [illegible] கல்வி[illegible] வர்களின் அதிகமான [illegible]

கல்வி கற்க வெளிநாடுகளுக்கு அனுப்ப விழையும் தகுதிவாய்ந்த ஒரு சிலரின் நன்மைக்காகவிருக்கலாம்.

தமிழ் மக்கள் விரும்புவது குறைந்த செலவில் உயர் கல்வி கற்பதற்கு வீட்டுக்கருகில் தன்னிறைவுபெற்ற ஒரு பல்கலைக்கழமேயன்றி, அரசியல்வாதிகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் அனுகூலமளிக்கக்கூடிய திட்டங்களல்ல.

இவ்விடயம், மனிதாபிமான அடிப்படையிலும், இந்நாட்டின் வேறுபட்ட கலாச்சாரங்களின் வளர்ச்சியின் அடிப்படையிலும் தேசிய உயர்கல்விச் சபையினதும் அரசாங்கத்தினதும் பாரபட்சமில்லாத தூய்மையான ஆலோசனையையும் தீர்ப்பையும் பெறுமென மனப்பூர்வமாக எண்ணுகின்றேன்.

### கொழும்பு மாநகரசபை
## கார்ப்பரேஷன் மசோதா விரைவில் சமர்ப்பிக்கப்படும்

கோட்டை, வெள்ளி

கொழும்பு மாநகர சபையைகார்ப்பரேஷனுக்குவதற்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தயாரித்த நகல் சட்டம் விரைவில் ஆட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

திரு. வின்சன்ட் பெரேரா மேயராக இருந்தகாலத்தில் கொழும்பு மாநகரசபையை கார்ப்பரேஷன் அந்தஸ்த்துக்கு ஆக்க வேண்டுமென அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு. எம். திருச்செல்வத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தக் கோரிக்கையை திரு. திருச்செல்வம் ஏற்றுக் கொண்டு, அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்.

நாட்டிலுள்ள மாநகரசபைகளில் முதல் முதலில் ஸ்தாபிக்கப்பட்டது கொழும்பு மாநகரசபையாகும்.

ஆட்சி மன்றம் பொதுத் தேர்தலுக்காகக் கலைக்கப்படுவதற்கு முன்னர் இந்த மசோதா ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## கொலை வழக்கில் தந்தையும் 3 பிள்ளைகளும்

பாணந்துறை. வெள்ளி

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் 3 பிள்ளைகளும் கொலைவழக் கொன்றில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளர். கெசல்வத்தை என்னுமிடத்தைச் சேர்ந்த டபிள்யூ வில்பேட் பெர்னுண்டோ என்பவரைக் கொலைசெய்ததாக இவர் மீதுகுற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சொலமன்பெர்னுன்டோ, ஒஸ்டின் பெர்னுன்டோ, பீட்டர் பெர்னுன்டோ சார்லட் பெர்னுன்டோ ஆகிய மூவரும் நேற்று முன்தினம் பாணந்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே.ஜே. எவ். ஏ. டயஸ் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆஜராகியிருந்தனர்.

கத்திவாள் போன்ற ஆயுதங்களைப்பாவித்து கொலை செய்யப்பட்டிருக்கலாமென விசாரணையில் சாட்சியமளிக்கப்பட்டது.

## விண்ணகப் பேச்சு

தாங்கள் ஆவியுலகப் பேச்சுப்பற்றி உங்கள் பத்திரிகை [illegible] 'ஈலநாட்'டில் வெளியிட்டு வருகிறீர்கள். அவ...

ரார்ப்பணம் செய்து கொள்வாரு?

திரு. கென்னடியவர்கள் ஆவியுலக ஜனதிபதியென்று...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலும் நகரிலும்

வீட்டுக்கு தலைவாசல் போல் அமைந்துள்ள ஒரு சிறிய கொட்டில், நாலுகரைக்கும் சுமார் மூன்றுஅடி உயரத்தில் மண்ணினுல் அரைச்சுவர் எழுப்பப்பட்டிருந்தது. அதற்கு மேல் மரக்கப்புகள் வைத்து அவை வளைகளைத் தாங்கிக்கொள்ளுகின்றன முகடுகட்டி பனையோலையால் வேயப்பட்டிருந்தது அந்தக் கொட்டில்.

மார்கழிமாதப்பிறப்பன்று தொடக்கம் பதினைந்து நாட்கள் வரை ஓயாத அடைமழையல்லவா? மண் சுவர்கள் நன்ருக ஊறி உள்ளுக்கு நெகிழ்ந்து போயிருந்தன. மேற்பார்வைக்கு அது தெரியவில்லை. கடந்த நாலைந்து நாட்களாக கொட்டிலைச் சுற்றி நாலு, பக்கமும் அரைஅடி ஆழத்துக்குமழை வெள்ளம் தேங்கி நின்று கொண்டது. முந்திய நாளிரவு அரை நிமிடமும் சலிக்காமல் பேய்மழை கொட்டிக்கொண்டேயிருந்தது. இரவு சுமார் மூன்று மணியிருக்கும். மண் சுவர்களால் அதற்குமேல் தாங்கிக் கொண்டிருக்க முடியவில்லை

திடீரென்று கப்புகள் சரிந்துவிலகின. வளைகளும்மரங்களும் கூரையும் அப்படியே 'பொத்'தென்று கீழே விழுந்தன உள்ளே நடுத்தர வயதுள்ள ஓர் ஆண் படுத்திருந்தார். அவருக்கு அருகில்ஒரு பையனும் உறங்கிக்கொண்டிருந்தான்.

நன்ருக விடிந்தபின் தான் கூரை பாரற்று விழுந்த செய்தி மற்றவர்களுக்குத் தெரியவந்தது உடனே பெரியகூக்குரல் எழுப்பி அக்கம் பக்கத்தாரை அழைத்தனர். கொட்டும் மழையில் முழங்கால் வெள்ளத்தில் நின்றுகொண்டு ஓலைகளைப் பிய்த்தெடுத்து சலாகை, கிடுகுகள் வழியேஒருவர்உள்ளே இறங்கிப் பார்த்தார். பதினைந்து அடிநீளமுள்ள ஒரு பெரிய பாரமானவளை படுத்திருந்தவருடைய கழுத்துக்குக் குறுக்கே விழுந்திருந்தது. நல்லவேளையாக அரைச் சுவர்கள் வளையின்பாரத்தை குழைந்து தாங்கிக்கொண்டன. இல்லாவிட்டால் அவர் கதி...? வளைவிழுந்த அதிர்ச்சியினுல்அவர்உடனேமயங்கி மூர்ச்சை போட்டுவிட்டார் சிறிதுநேரம் கழித்து அவர் சுயநினைவுக்கு வந்தபோது கழுத்தில் சிறுகாயமும் வலியும் மட்டும் இருந்தன. பையனும் உயிர்பிழைத்துவிட்டான்.

இதுதான் நேரில் காணத்...

முறித்துக்கொண்டார்களோ, எத்தனை ஆயிரத்துக்கு பொருட்சேதம் ஏற்பட்டதோ? சரியான புள்ளி விபரங்கள் எவருக்குமே தெரியமாட்டாது.

இப்படியான அடை மழை பெய்யும் காலங்களில் மண் வீடுகள் ஊறிப்போய் பார் இடிந்து விழுந்து போவது சகஜம். சுவரோரங்களில் படுத்திருப்பது ஆபத்து நிறைந்தது. கூடிய வரையில் வீட்டுக்கு மையத்திலேயே இரவுநேரங்களைக் கழிக்கவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறுகள் இல்லாதபடியினுல் வெள்ளப்பெருக்கினுல் அழிவு உணடாவதில்லை. சுற்றிவரக் கடல் இருப்பதால் மழை வெள்ளம் விரைவில் பாய்ந்தோடி விடும். ஆயினும் சில இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மண் குடிசைகளில் வாழ்பவர்களுக்கு மேலே சொன்னது போன்ற ஆபத்துகள் நேருவதுண்டு. இயற்கையின் கோளாறினுல் வீடிழந்தவர்கள் நஷ்டமுறறவர்களுக்கு அரசாங்கம் எப்படி ஈடு செய்யப் போகிறது?

கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டோ, பெரும் புயல் அடித்தோ நஷ்டப்படுகிறவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்வதோடு நில்லாமல் இப்படி மூலைக்கு ஒன்ருக ஏற்படும் நஷ்டங்களுக்கும் ஏதாவது உதவி அளிக்க வேண்டும். ஒரு கிராமமோ அல்லது குறிச்சியோ முற்றிலும் பாதிக்கப்பட்டால்தான் உதவி அளிக்க வேண்டும் என்பதல்ல.

மூன்ரும் வருடம் கடும் மழை பெய்து காற்றடித்த போது, தங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேறி பள்ளிக்கூடங்கள் முதலிய பொது இடங்களில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு மட்டுமே இலவச ரேஷன் முதலிய அரசாங்க உதவிகள்கொடுக்கப்படுமென்று சில கிராம சேவையாளர்கள் பிடிவாதம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து வீடுகள் இடிந்து விழுந்தும் வீட்டை விட்டு வெளியேருதவர்கள் மேலிடங்களுக்கு முறைப்பாடு செய்த பின்னரே அவர்களுக்கும் அரசாங்க உதவி கிட்டியது.

பதினைந்து நாட்கள் தொடர்ந்து பெய்த மழையினுல் வீடுகளுக்கும், பயிர்களுக்கும் நிச்சயமாக சேதம்...

யாவது சேர்த்துவிடுங்கள் என்று ஆட்சிமன்றப் பிரதிநிதிகளிடம் படையெடுக்கும் வாலிபர்களுக்கும் குறைவில்லை. ஆனல் இவர்கள் தேசிய இளைஞர் சேவையில் சேர்வதற்கு முன்வருகிறுர்களில்லை.

இந்தச் சேவைபற்றி சரியாகப் பிரசாரம் செய்யப்படாததும் சரியான விளக்கம் கொடுக்கப்படாததும் ஒரு காரணமாக இருக்க வேண்டும். அல்லது தொழிலில் வும் அதே சமயம் வேறு தொழில்களுக்கான நல் வாய்ப்பும் பெற முடியும். இந்த வசதிகளை இதர மாகாணங்களிலுள்ள இளைஞர்கள் பயன்படுத்தும்போது யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்கள் மட்டும் ஏன் பயன்படுத்தக் கூடாது;

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள படித்த வாலிபர்கள் இதில் சேர முன்வருவது அவர்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# "பல்கலைக்கழக தீர்மானம் செல்லுபடியாகாது"

திரு. தா. சங்கரப்பிள்ளை சர்வகலாசாலை நிறுவுவது பற்றி ''யாழ் வழக்கறிஞர் சங்கம்'' தீர்மானம் செய்ததாக அறிக்கைகள் விட்டிருக்கிறுர். இத்தீர்மானம் செல்லுபடியாகாது எனத் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

இதற்குரிய பல காரணங்களில் ஒன்றை மட்டும் கூறிணுல் போதுமானது.

மேற்கூறப்பட்ட ''வழக்கறிஞர் சங்கம்'', ஏறக்குறைய பத்து வருடங்களுக்கு மேலாக வருடாந்த கூட்டமோ, உத்தியோகஸ்தர் தெரிவோ இல்லாமலே திரு. சங்கரப்பிள்ளை ஒரு நிரந்தர உத்தியோகஸ்தராக- காரியதரிசியாக- இருந்து இயக்க இயங்கி வந்துள்ளது

ஆறு மாதத்திற்கு முன்னர் இச்சங்கத்தின்பெயரில் திரு சங்கரப்பிள்ளை கூட்டமொன்று நடாத்திய போது ''வருடாந்த கூட்டம் ஒன்றைக் கூட்டி உத்தியோகஸ்தர் தெரிவு செய்யாமல் கூட்டத்தைக் கூட்டுவது எந்தச் சங்கத்தினதும் விதிகளும் முரண்பாடானது'' என நான் ஆட்சேபனை தெரிவித்தேன். உடனே அக்கூட்டத்தில், சமாதானமாகத் திரு. சங்கரப்பிள்ளை அன்றிலிருந்து மூன்றுமாதங்களுக்குள் பொதுக்கூட்டம் கூட்டி உத்தியோகஸ்தர்களை தெரிவு செய்யவிருப்பதாக வாக்குறுதியளித்தார். அத்தருணம் என்னுல் பிரேரிக்கப்பட்டு திரு. எஸ். குமாரசுவாமியினுல் ஆமோதிக்கப்பட்டு. பின்வரும் பிரேரணை சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

'இன்றுதொடக்கம் மூன்று மாத காலவரை எல்லைக்குள் திரு. சங்கரப்பிள்ளை பொதுக் கூட்டம் வைத்துப் புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யாவிட்டால், யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்கம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

இவ்விதம் நிறைவேறிய தீர்மானத்திதின் படி தேர்தலுக்கும் பொதுக் கூட்டம் கூட்டத் தவறியபடியால், மேற்கூறிய சங்கம் கலைக்கப்பட்டதாகவே கருதப்படவேண்டும். எனவே திரு சங்கரப்பிள்ளைக்கு காரியதரிசி என்ற உரிமையோ அந்தஸ்தோ இல்லை என்றே கருதப்படல் வேண்டும். எனவே இதற்குப்பின்னர் 'வழக்கறிஞர் சங்கம்' என்ற பெயரில் நடைபெற்ற எந்தக் கூட்டமோ அல்லது தீர்மானமோ செல்லுபடியாகாது இங்ஙனம் அமைந்துள்ள தீர்மானங்களையொட்டி 'வழக்கறிஞர் சங்கம்' சார்பாக வெளியிட்ட மகஜர்களோ செல்லுபடியாகாது

யாழ்வழக்கறிஞர் மத்தியிள்ள உண்மை நிலையைப் பொதுமக்கள் அறிய வேண்டும் என்பதற்காகவும், நூற்றுக்கு யேலுள்ள அரசியல் கட்சி சார்பற்றயாழ்ப்பாண வழக்கறிஞர்களின் பெயரைப் பிரயோகித்து துடிதுடிப்புடன் ஒரு சிலர் அரசியல்கட்சி லாபங்கருதி அறிக்கைகள் விடுத்துக் குழப்பங்கள் உண்டு பண்ணும் வழக்கம் நிறுத்தப்படல் வேண்டும் என்பதற்காகவும் நான் இதைக்கூற முன்வந்துள்ளேன்.

இராஜஇராஜேஸ்வரன்.
தங்கராசா
(அட்வகேட்)

பால் வைத்துத் தீர்மானிக்க வேண்டும். இத் தொடர்பில் பேராதனை, கொழும்பு, வித்தியோதய, வித்தியலங்கார ஆகிய பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கு முன், பொது மக்களினுடைய அபிப்பிராயங்களோ அல்லது அரசியல் கட்சிகளினுடைய அபிப்பிராயங்களோ பெறப்படவில்லையென்பதைக் குறிப்பிடுவது இங்கே சாலப் பொருத்தமாகும்! ஆகவே தமிழருக்கு மாத்திரம் ஓர் பல்கலைக் கழகம் நிறுவும் விடயம், உடன்பாடு காணமுடியாத. அரசியல் கட்சிகளின் பூசல்களைக் கிளப்பும் ஓர் துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது மனவேதனையைக் கொடுக்கிறது.

தமிழர்களுக்கெனப் பிரத்தியேகமான ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்னும் கோரிக்கைக்குப் பின்வரும் நியாயங்களை எடுத்துக் காட்டவிரும்புகின்றேன்.-

(அ) உயர் கல்விகற்க வேண்டிய அவசியமும், உயர் கல்வி கற்கவிரும்பும் கூடுதலான பிள்ளைகளின் தொகையும்.

(ஆ) கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக் கழகங்கள் இந்நிலையை முழுமையாக ஏற்றுச் சமாளிக்கமுடியாத நிலை.

(இ) எமது பிள்ளைகளில் பெரும்பாலானேர் வசிக்கும் இடங்களுக்கு அண்மையில் உயர் கல்வி தாபனம் இருக்க வேண்டும் அத்துடன் அவர்களுககு உணவுவிடுதி முதலிய ஒழுங்கு வசதிகள் போதியளவுகிடைக்கப்பெறுவதற்கும், தங்கள் பழக்கத் ...னிக்கப்பட வேண்டும்.

(அ) தமிழர் பெருவாரியாக உள்ள இடமும் உயர் கல்விக்குப் போகும் மாணவர்களின் அதிகமான தாகையும்.

(ஆ) பரம்பரைக் கல்விப் பேறுகளும், வரலாற்று முக்கியத்துவமும்.

(இ) கல்வியின் பலதுறைகளிலும் இருக்கும் பாண்டித்தியம்.

(ஈ) கட்டிடங்களும் மற்றும் வைத்தியம், பொறியியல், விவசாயம் முதலியவற்றின் செயல்முறைக் கல்விக்கு ஏற்ற சூழ்நிலையும், இவற்றிற்கு தேவையான பல நூல்களடங்கியபொது, கல்லூரி நூலகங்களும் எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தை விஸ்தரிக்கக்கூடிய நிலவசதி.

இவைகளே ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்கு வேண்டிய மூலசாதனங்களாகும்.

இவ்வடிப்படையில் அமையும் ஒரு பல்கலைக்கழகம், தமிழருக்கு வேறுபாடில்லாத உயர்கல்வி நிலையமாக மலர வேண்டும். ஆகவே பல்கலைக்கழகக் கல்வியை 'இந்துக் கலாசாரம்' 'தகும் பல்கலைக்கழகம்' முதலான சொற்றொடர்களில் அமுக்குவது, ஒன்றில் இதன் உண்மை நோக்கத்தை உணர முடியாத தன்மை அல்லது ஆர்வமும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து உயர்கல்வியை இட்டுச்செல்வதற்குத் தீட்டப்படும் மறைமுகமான திட்டமாகும். இத்தகைய திட்டம் இன்னும் தமது பிள்ளைகளை தேச நலனுக்கு மாறுக உயர்

# சொத்து விபரங்களை அபேட்சகர்களும் வெளியிடவேண்டும்

சொத்து விபரங்களை வெளியிடக்கோரும் மசோதாவினுல் இந்த நாட்டு மக்களுக்கு ஏதேனும் நன்மை உடனடியாகக் கிடைக்க வேண்டுமானுல் இந்த மசோதாவில் உடனடியாக திருத்தம் செய்யப்படுவது அவசியம்.

தேர்தலுக்கு நிற்கும் எந்த ஒரு அபேட்சகரும் தனது சொத்து விபரங்களைவெளிப்படுத்த வேண்டும் எனும் ஷரத்து இதில் சேர்க்கப்படவேண்டும். செனட்டர்கள் தேர்வு விஷயத்திலும் இது செயல் படுத்தப்பட வேண்டும்..

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும்பொழுது குறிப்பிட்ட அபேட்சகர் தனது சொத்து விபரத்தையும் தனது மனைவி அல்லது கணவனது சொத்து விபரத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பிள்ளைகள் எவராவது இருந்தால் அவர்களது சொத்து விபரத்தையும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வித திருத்தங்கள் இந்த மசோதாவில் செய்யப்பட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் (1970) இதை அமுல் நடத்தி லஞ்சத்தையும் ஊழலையும் ஆட்சி மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் செனட்டர்களிடமிருந்தும் அமைச்சர்களிடமிருந்தும் ஒழித்துக்கட்டி விடலாம்.

ஆர். விஜயஇந்திரா
ஜனநாயக சோஷலிஸ
கட்சி ஸ்தாபகரும்
காரியதரிசியும்.

## ஆவியுலகப் பேச்சு

தாங்கள் ஆவியுலகப் பேச்சுப்பற்றி உங்கள் பத்திரிகையாள 'ஈலநாட்'டில் வெளியிட்டு வருகிறீர்கள். அவற்றை மிக ஆழ்ந்து படித்ததன்மூலம் இந்த கடிதத்தை எழுத முன்வந்தேன்.

உங்களுக்கும் சரி எனக்கும் சரி அன்றி வேறெங்காவது தெரியக்கூடிய உண்மைகளை ஒருபோதும மறுக்க முடியாது. ஆயின் அது அது என்னவெனில் எதையும் தீர ஆராய்ந்து முடிவை அறிவதே. நீங்கள் ஆவியுலகப்பேச்சை நம்பி அதை வெளியிட்டு வரும்போது அதைத் தீர ஆராய்ந்து விடாமல் வெறும் நம்பிக்கையே மாத்திரம் துணையாகக் கொண்டுள்ளீர்கள் என்று நான் நம்பவில்லை. எனினும் சில மாறுபாடான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்கள் என்பதை அறியத்தர ஆவலுடையேன்.

ஒருமுறை தந்த விளக்கமொன்றில் (ஈழநாட்டில் வெளியானது) இறந்த ஒருவருடைய ஆவியானது அந்த மனிதன் தான் வாழ்ந்த காலத்தில் அறிந்தவற்றை விட மேலதிகமாக எவற்றையும் ஆவுயுலகத்தில் அறியான் எனவும் இன்னெரு முறை வேறொரு ஈழநாடு வெளியீட்டில் உதாரணமாக மகாத்மாகாந்தி தன்னுடைய கருத்தையே மறுத்துரைத்ததையும் தந்திருக்கிறீர்கள்.

இரண்டாவதாக ஆவியுலகம் என்பது எங்கே உள்ளது. பூமியிலா அன்றி வேறெங்குமா? இன்னும் உதாரணமாக ரஷ்யா விண்வெளிக்கலத்தில் சிலரை அண்டவெளிக்கனுப்பி அவர்களை மீட்க வகையற்றுயற்று இருந்தபோது (விண்வெளி சகாப்தத்தின் தொடக்க காலத்தில் இது நிகழ்ந்தது) அவர்கள் அங்கேயே அண்டவெளியிலேயே இறந்ததாக சொல்லப்படுகின்றதே. இதை நிரூபிக்கின்றன அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் பதிவு செய்யப்பட்ட சமிக்ஞைகள்: அப்படியெனில் அவர்களின் ஆவிகள் எங்கே சென்றன! அண்டவெளியில் காற்றே அன்றி வேறெந்த விசைகளோ அல்லது ஒரு ஊடாகவோ இல்லையென்பதைக் கருத்திற் கொண்டு நோக்கினுல் அந்த ஆவிகள் எங்கே சென்றன. மேலும் தற்செயலாக பூமியிலுள்ள மனிதன் சந்திரனுக்குச் சென்று எதிர்பாராதவாறு இறந்துவிட்டான் என்று கொண்டால் அவன் ஆவி எங்கே போகும்? சந்திரனில் ஒரு புது ஆவியுலகத்தை அங்கு ரார்ப்பணம் செய்து கொள்வாளு?

திரு. கென்னடியவர்கள் ஆவியுலக ஜனுதிபதியென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள் நன்று. இங்கேயும் ஜனுதிபதியாயிருந்தால் அங்கேயும் ஜனுதிபதியாயிருக்கலாம் போலும். இங்கே பிறசமயிகளை வெறுத்த திரு. ஆறுமுகநாவலர் அங்கே திரு. கென்னடியுடன் எப்படிச் சிநேகம் கொண்டார்?

திரு. ஆபிரகாம் கோவூர் இந்தப் பேசும பலகை முறைக்குத் தந்த விளக்கத்தை இங்கு நோக்குதல் பொருத்தம். அவர் கூறியது அந்தப் பலகையின் முன் உட்கார்ந்திருப்பவர் தன் கையை வைத்திருக்கும் கிண்ணத்தை அசையவிடும் போது அவருடைய எண்ணங்களும், அவர் அந்த இறந்த மனிதனைப்பற்றிக் கொண்டுள்ள எண்ணங்களுமே வெளிப்படுகின்றனவே தவிர ஆவியோ அன்றி வேறெதுவோ பேசுவதில்லை. நீங்கள் கூறலாம் அப்படியானுல் பேசச் செய்பவருக்கு முற்றும் தெரியபத ஒருவரின் ஆவியை அழைத்து பேசிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன என்று. இதற்கும் விடை உண்டு. பேசச் செய்பவர் கூறுபவற்றை மற்றவர்கள் நம்ப வேண்டிய கட்டாயம் ஏனெனில் அவருக்கும் தெரியாதே. இதற்காகத்தான் அதாவது தான் கூறுபவற்றை நம்பச் செய்வதற்காகத்தான் பேசச் செய்பவர் முதலில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறுர் என்பது வெளிப்படை உதாரனமாக மனிதன் சந்திரனில் இறங்கினுன் என்று நம்பாதவர்களை மனிதன் மத்தியில் உலாவும் புகைப்படத்தின் மூலம் நம்பவைப்பதைவிட்டு என்னை நம்பாமல் விடாதே, நம்பிக்கையை வளர்த்துக் கொள் என்று சொல்வதன்மூலம் நம்பவைக்க முடியுமா?

உண்மை வேறு, நம்பிக்கை வேறு, வெறும் நம்பிக்கை மட்டும் பொய்யை மெய்க்காது அதற்குக் காரணங்கள் வேண்டும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள், தயது செய்து இந்தக் கடிதத்துக்கான பதிலை ஈழநாட்டில்' பிரசுரிக்கவும்.

சாகவச்சேரி, ஞானி

0 0 0

இச் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பும் தகுதியுமுள்ள மீரிகமை 'விண்ணக நிருபருக்கு' இவற்றை அனுப்பியுள்ளோம். ஆ. ஈ]

சுயநினைவுக்கு வந்தபோது கழுத்தில் சிறுகாயமும் வலியும் மட்டும் இருந்தன. பையனும் உயிர்பிழைத்துவிட்டான்.

இதுநான் நேரில் காணக்கூடியதாயிருந்த ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்திலும் மழையினுல் பாதிக்கப்பட்ட பிற இடங்களிலும் இப்படி எத்தனை எத்தனை சம்பவங்கள் நிகழ்கின்றனவோ? எத்தனை பேர் உயிர்பலி கொடுத்தார்களோ, எத்தனை பேர் கைகால்களை உதவி கிட்டியது.

பதினைந்து நாட்கள் தொடர்ந்து பெய்த மழையினுல் வீடுகளுக்கும், பயிர்களுக்கும் நிச்சயமாக சேதம் ஏற்பட்டே இருக்க வேண்டும். நஷ்டங்கள் திக்குக்கு ஒன்ருக இருந்த போதிலும் எங்கெங்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதோ அங்கெல்லாம் தற்காலிக உதவி அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

—வழிப்போக்கன்

கவிஞர்களை

# அரசர்களுக்குப் பதிலாக இன்று மக்கள்தான் ஆதரிக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

''முன்பெல்லாம் மன்னர்களும் வள்ளல்களுமே புலவர்களை ஆதரித்து வந்தனர். இன்றைய நிலையில் மன்னர் ஆட்சி மறைந்து மக்கள் ஆட்சி வந்துவிட்டது. ஆகவே கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஆதரிக்கவேண்டிய கடமை மக்கள் கையிலேயே உள்ளது.

இவ்வாறு சாகித்திய மண்டல பரிசுபெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளைக்கும் நவாலியூர் நா. செல்லத்துரைக்கும் அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவின் போது உடுவில் பாராளுமன்றஉறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''ஈழத்தில் எழுத்தாளர்கள நல்ல படைப்புகளை வெளியிடுகிறுர்கள. அவற்றைப் பணம் கொடுத்து வாங்குவதன்மூலம் எழுத்தாளனை மட்டுமின்றி இலக்கியத்தையும் வளர்த்தவர்களாகிறேம்'' என்றுர்.

நவாலி தெற்கு இலக்கிய அன்பர்களால் நடாத்தப்பெற்ற இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய ஆசிரியர் செல்வராசா பேசும் போது ஒரு தமிழ் எழுத்தாளனே கவிஞனே பரிசு பெற்றுல் அதனுல் முழுத்தமிழாகளுமே பெருமையடைகிறுர்கள். அந்த அடிப்படையில் சாகித்தியமண்டலப் பரிசு பெற்ற இவர்களைப் பாராட்டுவதன் மூலம் தமிழ் அன்னையையே மதித்தவர்களாகின்றேம் என்றுர்.

# நன்றியுள்ள மிருகமா?

யாழ்ப்பாணம், சனி

சுமார் 350 ரூபா பெறுமதியான 'அல்சேஷன்' நாய் ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபையினர் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றனர்.

இதற்குக்காரணம் அந்த நாய், வளர்த்த எஜமானனையே கடித்ததுதான் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் வண்ணூர் பண்ணையில் நடைபெற்றது.

நாய்கடித்ததால் காயங்களுக்குள்ளான வீட்டு எஜமானு சிதம்பரப்பிள்ளை சண்முகராஜா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றுர்.

(கா. நி)

## மரண அறிவித்தல்

### க. சிறீ சுந்தரமூர்த்தி (ஆரூரர்)

க. சிறீ சுந்தரமூர்த்தி (ஆரூரர்) பன்னலை தெல்லிப்பளை (சேர் கனகசபை வித்தியாசாலையின் முன்னுள் முகாமையாளர்) திருமதி சி. சரஸ்வதி நீலாயதாட்சியின் அருமைத் தந்தையும், திரு அ. சிற்றம்பலம் கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திருகோணமலை, அவர்களின் மாமனுரும் செல்வி சி. பராசக்தியின் பேரனுரும் 2-1-70 காலை 10 மணியளவில் காலமானுர். அன்னுரின் பூதவுடல் 3-1-70 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கீரிமலை மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org